பக்கங்கள்: பன்னிரண்டு

Registered as a Newspaper

உதயன்

விலை ரூபா 7.00

சுடர்:17 வள்ளுவர் ஆண்டு 2033 தை 12 வெள்ளிக்கிழமை (25-01-2002) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:61

# அம்பாறை நீங்கலாக வடக்கு - கிழக்கில் உள்ளூராட்சித் தேர்தல் ஒத்திவைப்பு!

கொழும்பு,ஜன.25

வடக்கு - கிழக்கில் அம்பாறை மாவட்டம் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் உள்ளூராட்சித் தேர்தல்கள் காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

ஐ.தே.கட்சியின் வடக்கு - கிழக்கு இணைப்பாளர் அப்துல் கபூர் இது தொடர்பான அறிக்கை ஒன்றை நேற்று வெளியிட்டார்.

ஐ.தே.கட்சியின் பிரதித்தலைவர் கரு ஜெயசூரியாவுக்கும் தமிழர் கூட்டமைப்பு, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகியவற்றின் தலைவர்களுக்கும் இடையில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலில் ஏற்பட்ட இணக்கத்தை அடுத்தே இந்த அறிக்கை வெளியாகியுள்ளது.

வடக்கு - கிழக்கில் அம்பாறை மாவட்டத்தில் உள்ள கல்முனை மாநகரசபை, அம்பாறை நகரசபை மற்றும் 14 பிரதேசசபைகள் ஆகியவற்றுக்கு மட்டும் தேர்தல் நடத்தப்படும். ஏனைய சபைகளுக்கான தேர்தல்கள் காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளன என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த முடிவை அடுத்து யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை, வன்னி மாவட்டங்களுக்கான வேட்பாளர்களைத் தெரிவு செய்யும் நடவடிக்கைகள் ரத்துச் செய்யப்பட்டுள்ளன என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ-3-10)

# இருதரப்பு போர் நிறுத்தத்தை கண்காணிக்க வெளிநாட்டுக் குழு!

## அமைச்சர் பீரிஸ் தகவல்



**கொழும்பு,ஜனவரி25**

**அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே இருதரப்பு யுத்தநிறுத்தத்தை உள்ளடக்கிய புரிந்துணர்வு உடன்பாடு நடைமுறைப்படுத்தப்படுவதை வெளிநாட்டுப் பிரதிநிதிகள் அடங்கிய குழு ஒன்று கண்காணிக்கும்.**

**அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் இத்தகவலைத் தெரிவித்திருக்கிறார்.**

அமைச்சரவைத் தீமானங்களை வெளியிடும் செய்தியாளர் மாநாடு நேற்று நடைபெற்றது. சமாதான முயற்சிகள் தொடர்பாக அமைச்சர் பீரிஸ் அங்கு விளக்கமளித்தார்.

அவர் தெரிவித்ததாவது:-

அரசின் மோதல் தவிர்ப்பு பிரகடனம் எதிர்வரும் பெப்ரவரி 24ஆம் திகதி முடிவடைவதற்கு முன்னர் நிரந்தர யுத்தநிறுத்தம் தொடர்பான புரிந்துணர்வு உடன்படிக்கையில் இருதரப்பும் கைச்சாத்திடும் என்று எதிர்பார்க்கிறோம். அதேவேளை சர்வதேச ஆதரவை இழக்காத வண்ணம் புலிகள் அமைப்பு மீதான தடைநீக்கம் பற்றிய இறுதி முடிவை எடுப்பதற்கு அரசு உறுதிபூண்டுள்ளது.

தற்போது அமுலிலுள்ள இருதரப்பு மோதல் தவிர்ப்புப் பற்றிய நடைமுறைகள் அரசாங்கத்தால் பரிசீலிக்கப்பட்டு வருகின்றன. மோதல் தவிர்ப்பு மீறப்படக்கூடிய சந்தர்ப்பங்கள், மீறப்பட்டால் அதன் தாக்கம் அதை எப்படிச் சமாளிப்பது என்பன தொடர்பான ஒழுங்கு முறைகள் குறித்து அரசு ஆராய்ந்து வருகிறது.

இது விடயத்தில் ஓர் உறுதியான நிலையைப் பேணுவது அரசியல்வாதிகளுடைய கடமைமட்டுமல்ல சமூகங்களுடைய கடமையுமாகும்.

புலிகள் மீதான தடைநீக்கம் பற்றி அரசு இதுவரை எந்த முடிவுக்கும் வரவில்லை. தடைநீக்கப்பட்டால் நாட்டின் பாதுகாப்புக்குப் பங்கம் ஏற்படுமா என்பது உட்பட பல விடயங்கள் பற்றிப் பல்வேறு தரப்புடனும் பேசி வருகிறோம்.

இனப்பிரச்சினைக்குப் பேச்சு மூலம் அரசியல் தீர்வு காணப்பட வேண்டும்

(12ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சர் ஜயலத் அடுத்த மாதம் யாழ்.வருகிறார்

கொழும்பு,ஜன.25

புனர்வாழ்வு, அகதிகள் மீள்குடியமர்வு அமைச்சர் ஜயலத் ஜெயவாத்தனா அடுத்த மாதம் 13 ஆம் திகதி யாழ்ப்பாணத்துக்கு விஜயம்செய்யவுள்ளார்.

அமைச்சின் அதிகாரிகள் குழு ஒன்றும் அமைச்சருடன் வருகை தரவுள்ளது. (ஐ)

## பெண்ணுக்கு நஷ்டஈடு வழங்க உத்தரவு

கொழும்பு,ஜன.25

மருதானை தொழில்நுட்பக் கல்லூரிக்கு அருகில் அமைந்துள்ள படையினரின் காவலரணில் கடந்த ஜூன் மாதம் தமிழ்பெண் ஒருவர் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்ட சம்பவத்தில் பிரஸ்தாப பெண்ணுக்கு ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா நஷ்டஈடு வழங்குமாறு உயர் நீதிமன்றம் அரசுக்கு உத்தரவிட்டுள்ளது.

தனக்கு இழைக்கப்பட்ட கொடுமைக்கு எதிராக பிரஸ்தாப பெண் உயர்நீதிமன்றத்தில் அடிப்படை மனித உரிமை மீறல் மனு ஒன்றைத தாக்கல் செய்திருந்தார்.

இந்த மனுவை விசாரணை செய்த நீதிமன்றம் நேற்று வழங்கிய தீர்ப்பில் நஷ்டஈடு வழங்கும்படி உத்தரவிட்டது. (ஐ-3)

## மகாநாயக்கர்களிடம் இராணுவத் தளபதி மன்னிப்புக் கோரினார்

கண்டி தலதா மாளிகை அருகே நேற்றுமுன்தினம் பொலீஸாருடன் இராணுவத்தினர் மோதிக் கொண்ட சம்பவம் தொடர்பாக அஸ்கிரிய மற்றும் மல்வத்த பௌத்த பீடங்களின் மகாநாயக்கர்களிடம் இராணுவத்தளபதி லெப்டினன்ட் ஜெனரல் லயனல் பலகல்ல நேற்று மன்னிப்புக் கோரியுள்ளதாக இணையத்தளமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

தலதாமாளிகையின் தியவதன நிலமே நிரஞ்சன் விஜயரட்ணவிடமும் அவர் மன்னிப்புக் கோரியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

மேற்படி மோதலினால் தலதா மாளிகை மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் பதற்றம் நிலவியது தெரிந்ததே. (ஒ)

## பிரதமரின் உரை மீதான விவாதம்

## எதிரணி எம்.பிக்கள் நேற்றும் பகிஷ்கரிப்பு

கொழும்பு,ஜன.25

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் கொள்கை விளக்க உரை தொடர்பாக நாடாளுமன்றத்தில் இடம்பெற்று வரும் விவாதத்தை பொதுமக்கள் ஐக்கிய முன்னணி எம்.பிக்கள் நேற்றுப் பகிஷ்கரித்தனர்.

இரண்டாவது நாளாக நேற்றும் விவாதம் இடம்பெற்றது. ஜே.வி.பி., தமிழ்க்கட்சிகளின் கூட்டமைப்பு, புளொட், ஈ.பி.டி.பி. ஆகியவற்றின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மட்டுமே எதிர்த் தரப்பு வரிசையில் அமர்ந்திருந்தனர்.

நேற்றுமுன்தினம் நண்பகலுக்குப் பின்னர் சபை நடவடிக்கைகளைப் பகிஷ்கரித்த பொதுமக்கள் ஐக்கிய முன்னணியினர் நேற்றும் சபைக்கு வரவில்லை.

இதேவேளை -

எதிர்கட்சித் தலைவர் ரத்னசிறி விக்கிரமநாயக்க தனது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை துறந்துவிட்டார் என்று கொழும்புப் பத்திரிகைகள் சில நேற்று செய்தி வெளியிட்டன. எனினும் இச்செய்தியை பொதுமக்கள் ஐக்கிய முன்னணி மறுத்துள்ளது. (ஐ-3-10)

## நோர்வேத் தூதுக்குழு மீண்டும் திங்களன்று பாலாவுடன் பேச்சு:

நிரந்தர யுத்தநிறுத்த உடன்பாடு ஒன்றை எட்டுவது தொடர்பாக கலந்துரையாடுவதற்காக நோர்வேத் தூதுக்குழு எதிர்வரும் திங்கட்கிழமை விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தைச் சந்திக்கவிருக்கின்றது.

இருதரப்புக்கும் இடையில் நிரந்தர யுத்தநிறுத்தம் உட்பட ஏனைய விடயங்கள் தொடர்பாக எட்டப்படவுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தம் குறித்து இந்தப் பேச்சில் விரிவாக ஆராயப்படும்.

நோர்வேத் தூதுக்குழுவின் தலைவரான பிரதி வெளிவிவகார அமைச்சர், ஹெல்கீஸனும் இந்தப் பேச்சுகளில் பங்குபற்றவிருக்கின்றார்.

நோர்வேக்குழுவுக்கும் பாலசிங்கத்துக்கும் இடையில் அண்மையில் இரு தடவைகள் இடம்பெற்ற பேச்சுக்களில் பிரதி வெளிவிவகார அமைச்சர் பங்குபற்றவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-3)

## புலிகளின் வேண்டுகோள்கள் இந்திய அரசிடம் சமர்ப்பிப்பு

### தூதர் ஊடாக நோர்வே கடிதம்

கொழும்பு,ஜன.25

இலங்கை அரசுடன் பேச்சு நடத்துவது தொடர்பாக விடுதலைப் புலிகள் விடுத்த இரண்டு வேண்டுகோள்கள் இந்திய அரசிடம் தெரிவிக்கப்பட்டிருப்பதாக 'இந்து' பத்திரிகையில் செய்தி வெளியாகியுள்ளது.

விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தை கடந்த செவ்வாய்க்கிழமை லண்டனில் சந்தித்துப் பேசியபின்னர் நோர்வேத் தூதுக்குழுவினர் இத்தகவலை வெளியிட்டனர் என்றும் -

விடுதலைப் புலிகள் விடுத்த வேண்டுகோள்களின் விவரங்கள் குறித்து நோர்வேத் தூதுக்குழுவினர் எழுதியுள்ள கடிதம், கொழும்பில் உள்ள இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபாலகிருஷ்ணகாந்தி ஊடாக இந்திய அரசிடம் சேர்ப்பிக்கப்பட்டிருப்பதாகவும் -

அந்தப் பத்திரிகை தெரிவித்துள்ளது.

இலங்கை அரசுடனான உத்தேச சமாதானப் பேச்சுக்களை தென்னிந்திய நகரம் ஒன்றில் நடத்த விடுதலைப் புலிகள் விருப்பம் தெரிவித்திருப்பது குறிப்பிடத்தக்கது. (ஒ)

### வன்னியில் புலிகள் பகுதியிலிருந்து

## உற்பத்திப் பொருள்களை வவுனியா எடுத்துவர அனுமதி

கொழும்பு,ஜன.25

வன்னியில் விடுதலைப் புலிகளின கட்டுப்பாட்டில் உள்ள பகுதியில் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களை வவுனியாவுக்கு எடுத்துவர அரசு அனுமதியளித்துள்ளது.

ஒரு நாளுக்கு 10 லொறிகள் வீதம், வாரத்தில் நான்கு நாள்கள் இந்தப் பொருள்களை வவுனியாவுக்கு எடுத்து வர அனுமதி வழங்கப்படும் என்று வவுனியா அரச அதிபர் கே.கணேஸ் தெரிவித்துள்ளார்.

திங்கள், புதன், வியாழன் மற்றும வெள்ளிக்கிழமைகளில் பொருள்கள் எடுத்து வரப்படும் என்றும் -

இது தொடர்பாக கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் அரச அதிபர்களுக்கு தான் ஏற்கனவே தெரியப்படுத்தியுள்ளதாகவும் -

அவர் மேலும் கூறியுள்ளார்.

அரசின் 100 நாள்கள் அபிவிருத்

(12ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# விஞ்ஞான சங்க கண்காட்சிக்கு மாணவர்கள் முண்டியடிப்பு

யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் நடைபெற்று வரும் யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் நான்காவது கண்காட்சிப் போட்டியைப் பார்வையிட குடாநாட்டில் பல பாகங்களில் இருந்தும் கடந்த இரு தினங்களில் 8 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்களும், பொதுமக்களும் பார்வையிட்டுள்ளனர் என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

யாழ்.மாவட்டத்தில் உள்ள 17 முன்னணிப் பாடசாலைகளில் இருந்து 64 கண்காட்சிப் பொருள்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன.

நேற்றுமுன்தினம் புதன்கிழமை ஆரம்பமான இந்தக் கண்காட்சி, இன்று வெள்ளிக்கிழமை வரை நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.


## முயற்சி

புத்தகம் கட்டுதல் பயிற்சி நெறி 03 மாத காலம்

பாடசாலைக் கல்வியை பூர்த்தி செய்த இளைஞர், யுவதிகளின் எதிர்கால வளப்படுத்தலுக்காக.

ஆரம்பம்:- 02.02.2002

தலைவர்,
அ.நல்லதம்பி,
அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம்.

விண்ணப்பங்களுக்கு:
'முயற்சி'
அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம்,
106, 4ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.

(C/20464)

## விற்பனையாகின்றது

1. பொக்கற் டயறி முதல் மனேஜ்மன்ட் டயறி வரை அனைத்து டயறி வகைகள்.
2. அன்பளிப்பிற்கு உகந்த பலவர்ண ரோல் கலண்டர் வகைகள்.
3. மெய்கண்டான், லீலா தினத்தாள் கலண்டர்கள்.

அனைத்தையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள

### ஸ்ரீகாந் புத்தகசாலை

இல. 165, மின்சார நிலைய வீதி, பஸ்நிலையம், யாழ்ப்பாணம்.

### மக்மிலன் புத்தகசாலை

இல. 3, பஸ் நிலையம், யாழ்ப்பாணம்.

(C/20467)


## 5ஆம் ஆண்டு நினைவு நாளில்

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 24 - 01 - 1923 |  | 25 - 01 - 1997 |

அல்வாய் வடக்கு

### அமரர் கார்த்தி சின்னத்துரை

(மதுரகான நாதஸ்வரமணி)

எமது குடும்பத்தின் ஒளிவிளக்காய் ஒளிதந்து
எமையெல்லாம் வாழவைத்த அன்புத் தெய்வமே!
எங்கள் நெஞ்சமெல்லாம் நிறைந்து நிற்கும்
உங்கள் நினைவுகளை என்றென்றும்
சுமந்து நின்று தொழுகின்றோம் உம் பாதமலர்!

"பிருந்தாவனம்",
அல்வாய் வடக்கு,
அல்வாய். (C/20470)

மனைவி: சி.இரத்தினம்,
பெறாமகன்: இ.ரவிச்சந்திரன்
குடும்பத்தினர் (ஜேர்மனி)

## மரண அறிவித்தல்

### பாவிலு அருளப்பு

யாழ்ப்பாணம் திருநகரைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலி பாரதி புலத்தை வசிப்பிடமாகவும் கொண்ட பாவிலு அருளப்பு நேற்றுமுன்தினம் (23.01.2002) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பாவிலு - வெள்ளச்சி ஆகியோரின் அன்பு மகனும் பிரான்சிஸ்காவின் அன்புக் கணவரும் கௌரி (பிரான்ஸ்), சூசைநாதன் (பிரான்ஸ்), சாந்தி, சுதா, சுபோதினி (அனலைதீவு), இப்பொலின், செந்தூரன் ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் அருளானந்தம் (பிரான்ஸ்), பரமானந்தம், சங்கர், தர்மசீலன் (அனலைதீவு) ஆகியோரின் மாமனாரும் திருமதி ஐயம்பிள்ளை சுந்தரி, காலஞ்சென்ற தம்பிராசா ஆகியோரின் சகோதரரும், வினிபிரிடா, றீற்றாம்மா, யேசுராசா, பவா, றெஜி ஆகியோரின் மைத்துனரும் வேலாயுதம் எலிசபேத், முத்தன் புஸ்பராணி, அருமைத்துரை சுமதி, பாபு (வவுனியா), சோமராமு (மன்னார்), மேலின், குகேந்திரன் ஆகியோரின் சிறியதந்தையாரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (25.01.2002) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பிற்பகல் 4.00 மணியளவில் நல்லடக்கத்துக்காக கோண்டாவில் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பாரதிபுலம்,
திருநெல்வேலி. (சி20471)

தகவல்:
அருளப்பு குடும்பத்தினர்

## 'சிற்றி ஒவ் றிங்கோ' கப்பல் பயணிகளுக்கு!

யாழ்ப்பாணம்,ஜன.25

எதிர்வரும் 29 ஆம் திகதி இடம்பெறவுள்ள 'சிற்றி ஒவ் றிங்கோ' கபபலின் சேவையில் பயணம் செய்வதற்கு சில வெற்றிடங்கள் உள்ளன என்றும் -

பயணம் செய்ய விரும்புபவர்கள் இன்று பயணச்சீட்டைக் கொள்வனவு செய்யலாம் என்றும் -

யாழ்.சிவில் நிர்வாக அலுவலகம அறிவித்துள்ளது.

எதிர்வரும் 31 ஆம் திகதி இடம்பெறவுள்ள சேவைக்கான பயணப்பதிவுப் பத்திரம் பதியும் பணி நாளை சனிக்கிழமை இடம்பெறும் என்றும் சிவில் நிர்வாக அலுவலகம் தெரிவிததுள்ளது.

யாழ்ப்பாணத்தில் இருந்து கப்பலில் செல்பவர்கள் தமது பயணப் பதிவுப்பத்திரத்தை (மஞ்சள் பத்திரம்) சமர்ப்பித்து மீண்டும் யாழ்ப்பாணத்துக்கு கப்பலில் திரும்பி வருவதற்கான பயணச் சீட்டைக் கொழும்பில் பெறுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்றும் சிவில் நிர்வாக அலுவலகம் தெரிவித்துள்ளது.

## ரெலிக்கொம்மின் நிறைவேற்று அதிகாரி யாழ்.வருகை

யாழ்ப்பாணம்,ஜன.25

ரெலிக்கொம் நிறுவனத்தின் நிறைவேற்று அதிகாரியான சுகே அனான் இருநாள் விஜயம் மேற்கொண்டு இன்று யாழ்ப்பாணம் வருகின்றார்.

ரெலிக்கொம் நிறுவன ஊழியர்களுடனான கூட்டம் ஒன்றில் அவர் கலந்துகொள்கிறார். அத்துடன் வாடிக்கையாளர்களுடன் அவர்களது பிரச்சினைகள் தொடர்பான கலந்துரையாடல் ஒன்றிலும் அவர் பங்குபற்றுவார்.

## கொடிகாமம் அ.த.க. பாடசாலை மீண்டும் சொந்த இடத்தில்!

தென்மராட்சி,ஜன.25

கொடிகாமம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை மீண்டும் சொந்த இடத்தில் இயங்கவுள்ளது. பாடசாலையில் இணைந்து கல்வி பயில விரும்பும் மாணவர்களின் விவரங்கள் எதிர்வரும் 30, 31 ஆகிய திகதிகளில் பாடசாலையில் வைத்து பதிவுகள் மேற்கொள்ளப்படுமென வலயக் கல்விப்பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார். (ஒ-117)

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,ஜன.25

உடுப்பிட்டி, இமையாணன் அருள்மிகு பெரியதம்பிரான் ஆலய மகா கும்பாபிஷேகமும் மகுடாபிஷேகமும் நாளை சனிக்கிழமை அதிகாலை 6 மணிமுதல் இடம்பெறவுள்ளன.

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜன.25

இந்துகலாசார திணைக்களத்தினால் 99 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட சைவசமயப்போட்டியில் சித்தியடைந்த யாழ்.வண்.வடகிழக்கு கொண்டலடி விநாயகர் ஆலய அறநெறிப்பாடசாலை மாணவர்களுக்கு சான்றிதழ்கள் மற்றும் பரிசில்கள் வழங்கும் நிகழ்வு எதிர்வரும் திங்கட்கிழமை நண்பகல் 12 மணிக்கு ஆலயத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த அறநெறிப் பாடசாலை மேற்பிரிவில் யாழ்மாவட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ-3)

## விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,ஜன.25

நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களிடையேயான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு கொக்குவில் தொழில் நுட்பக கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ள அரையிறுதி ஆட்டங்களில் கலந்துகொள்ளவுள்ள அணிகள் வருமாறு:-

☆ கொக்குவில் நேதாஜி வி.க. எதிர் திருநெல்வேலி ஒலிம்பிக் வி.க.

☆ பொற்பதி சிவகுரு வி.க. எதிர் அரியாலை ஐக்கிய வி.க.

★ ★ ★

யாழ்ப்பாணம் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையேயான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு துரையப்பா விளையாட்டரங்கில் இடம்பெறவுள்ள கால் இறுதிஆட்டத்தில் கொய்யாத்தோட்டம் வி.கழகமும் குருநகர் வி.கழகமு[illegible]மோதுகின்றன. (ஒ-86)

## கண்ணீர் அஞ்சலி

எமது கலாசாலை நூலகர் திருமதி சறோஜினிதேவி தேவகுணராசா அவர்களின் அன்பு மாமியார்

### திருமதி மார்க்கண்டு அன்னப்பிள்ளை

அவர்கள் 21.01.2002இல் இயற்கையெய்தியதையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அவரின் ஆத்மா நித்தியத்தில் இளைப்பாறல் பெற இறைவனை வேண்டுகின்றோம்.

அதிபர், விரிவுரையாளர்கள், ஆசிரிய மாணவர் மன்றம், கல்வி சாரா ஊழியர்கள், பகுதி நேர விரிவுரையாளர்கள்,
பலாலி ஆசிரிய கலாசாலை.

(C/20469)

## மரண அறிவித்தல்கள்

### பொன்னையா அப்பச்சிப்பிள்ளை

தாவடியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா அப்பச்சிப்பிள்ளை நேற்று (24.01.2002) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பரமேஸ்வரியின் அன்புக் கணவரும் நாகம்மா (அம்மணி - கனடா), தியாகராஜா ஆகியோரின் அன்புச் சகோதரனும் சிவபாக்கியலட்சுமி, மகாலிங்கம் (சுவிஸ்), சோதிலிங்கம் (சோதி ஸ்ரோர்ஸ்), அமிர்தலிங்கம் (கட்டார்), யோகலிங்கம் (கட்டார்), சந்தான லட்சுமி ஆகியோரின் அன்புத் தந்தையும் அரியரட்ணம் (C.T.B), கருணாகரன், லலிதா, சறோஜினிதேவி, அனுசியா, காலஞ்சென்ற கமலினி ஆகியோரின் அன்பு மாமனும் V.S.இரத்தினம் (காலி), மனோன்மணி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (25.01.2002) வெள்ளிக்கிழமை பிற்பகல் 1 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இநத அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அ.அமிர்தலிங்கம் (சிறி)
தாவடி தெற்கு,
கொக்குவில். (97535)

தகவல்:
அ.மகாலிங்கம் (சுவிஸ்)
அ.சோதிலிங்கம், அ.அமிர்தலிங்கம்
அ.யோகலிங்கம். (மகன்மார்)

### அந்தோனிப்பிள்ளை யோசவ் மாஸ்ரர்

இளவாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட அந்தோனிப்பிள்ளை யோசவ் மாஸ்ரர் நேற்று (24.01.2002) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் மேரிமக்டலினின் அன்புக் கணவரும், ஜேம்ஸ் மேரி விக்ரர் (லண்டன்), புளோறன்ஸ் றஞ்சினி (கல்முனை), மேரி றெஜினா (நோர்வே), அன்ரன் பாகுதேவன் (இந்தியா), மரினா ரேவதி (இந்தியா), டொமினிக் (அருள் சகோதரர் - பிரான்ஸ் - சூசையப்பர் சபை), சேவியர் (கனடா), பிலிப் யேசுதாஸ் (நவீனன் - பிரான்ஸ்), சத்தியசீலன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற பண்டிதர் சந்தியாப்பிள்ளையின் அன்புச் சகோதரருமாவார்.

இவரின் பூதவுடல் நல்லடக்கத்துக்காக நாளை (26.01.2002) சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு இளவாலை புனித அன்னமாள் சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பிரதான வீதி,
இளவாலை. (97533)

தகவல்:
மேரி மக்டலின் (புஸ்பம்)
(பாரியார்)

### அம்பலவாணர் குலநாயகம் (காரைநகர்)

(சட்டத்தரணியும், சமாதான நீதிவானும்)

காரைநகர் புதுறோட்டைப் பிறப்பிடமாகவும், திக்கரை களபூமியை வசிப்பிடமாகவும் கொண்ட அம்பலவாணர் குலநாயகம் (சட்டத்தரணியும் சமாதான நீதிவானும்) நேற்று (24.01.2002) வியாழக்கிழமை அதிகாலை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற அம்பலவாணர் - சின்னக்குட்டியின் அன்புப் புதல்வரும், காலஞ்சென்ற காசிப்பிள்ளை - அன்னம்மா ஆகியோரின் அன்பு மருமகனும் பரமேஸ்வரியின் பாசமிகு கணவரும் பராசக்தி, சத்தியபாமா (ஆசிரியை - சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலயம், காரைநகர்), விஜயலட்சுமி (இளைப்பாறிய ஆசிரியை), அருளாம்பிகை, அருந்ததிதேவி ஆகியோரின் பாசமிகு தந்தையும் உருத்திரசிங்கம் (முருகன் ஸ்ரோர்ஸ் - யாழ்ப்பாணம்), ரங்கநாதன் (இத்தாலி), ரஞ்சிதன் (கொழும்பு), நடராசா (உதவி.அ.அதிபர் பணிமனை - ஊர்காவற்றுறை), மனோகரன் (அக்குரஸஸ) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் தயாளினி, சுதர்ஸன் (கனடா), சுகந்தினி, விதுஷன் ஆகியோரின் பிரியமான பேரனும், காலஞ்சென்றவர்களான கனகசபை (ஓ.ஏ), சின்னாச்சி, செல்லம்மா, மற்றும் கணபதிப்பிள்ளை (சோதி), லட்சுமிப்பிள்ளை, இராமநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (24.01.2002) வியாழக்கிழமை பிற்பகல் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் களபூமி தில்லை மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும் வண்ணம் பணிவுடன் அறியத்தருகின்றோம்.

நந்தாவில்,
களபூமி, காரைநகர். (97536)

தகவல்:
மனைவி

### திருமதி மாணிக்கம் நாகம்மா

தெல்லிப்பழை, கட்டுவனைப் பிறப்பிடமாகவும் ஆரியகுளத்தடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மாணிக்கம் நாகம்மா நேற்று (24.01.2002) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற மாணிக்கத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற பூவிலிங்கம், கனகரத்தினம் (ஓய்வுபெற்ற அதிபர், சமாதான நீதிவான், யாழ். மாநகர சபை உறுப்பினர்), செல்வராசா (முன்னாள் ஆரியகுளம் முற்போக்கு சனசமூக நிலையத் தலைவர்), மகாலட்சுமி, நவமணி, கனகசுந்தரம் (ACDC), குமரேசன் (பொறின் ஸ்ருடியோ உரிமையாளர்), காலஞ்சென்ற சுந்தரலிங்கம் (பிரான்ஸ்), பாலச்சந்திரன், சண்முகராசா ஆகியோரின் அன்புத் தாயாரும் சாமி ( அம்பாள் மினிபஸ் உரிமையாளர்), காலஞ்சென்ற தாமோதரன் (தரன் ஸ்ருடியோ உரிமையாளர்), பூ.றோசம்மா, க.விக்னேஸ்வரி, செ.பரமேஸ்வரி, க.சறோஜினிதேவி, கு.நாகேஸ்வரி சுறீற்றா, பா.பரமேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (25-01-2002) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் பி.ப. 3.00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக கிரியைக்காக வில்லூன்றி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

82/17, பருத்தித்துறை வீதி,
3ஆம் ஒழுங்கை, ஆரியகுளம்,
யாழ்ப்பாணம். (97537)

தகவல்:
மா.செல்வா[illegible]
(மகன்)

# அமெரிக்க பாதுகாப்புச் செலவு 4,800 கோடியால் அதிகரிப்பு!

## புதிய வரவு - செலவுத் திட்டம் அடுத்தமாதம்

வாஷிங்ரன்,ஜன.25

அமெரிக்கா தனது வரவு - செலவுத் திட்டத்தில் அடுத்த ஆண்டுக்



கான பாதுகாப்புச் செலவு 4ஆயிரத்து 800 கோடி டொலர்களால் அதிகரிப்புச் செய்யவுள்ளது.

இராணுவ அதிகாரிகள் மத்தியில் உரையாற்றிய அதிபர் ஜோர்ஜ் டபிள்யூ.புஷ் இதனைத் தெரிவித்தார்.

பயங்கரவாதத்துக்கு எதிரான யுத்தத்துக்குப் பயன்படுத்துவதற்காகவே இந்த நிதி அதிகரிப்புச் செய்யப்படுவதாக புஷ் சொன்னார்.

இந்தத் திடீர் அதிகரிப்பு அமெரிக்காவின் பாதுகாப்புச் செலவின் 15 வீதமாகும். கடந்த 20 வருட காலத்தில் அமெரிக்கப் பாதுகாப்புச் செலவு ஒரேயடியாக இவ்வளவு பெருமளவில் அதிகரிக்கப்பட்டது இதுவே முதற்றடவையாகும்.

துருப்பினரின் சம்பள அதிகரிப்பு, அதிநவீன ஆயுதக் கொள்வனவு, ஏவுகணைப் பாதுகாப்பு, ஆள்களில்லாத வாகனங்களின் கொள்வனவு, தரைப்படையினருக்கான ஆயுத உபகரணக் கொள்வனவு என்பவற்றுக்கு இந்தப் புதிய நிதி பயன்படுத்தப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

"புதிய உபகரணங்கள் நவீன யுத்தத்துக்குத் தேவையானவை. அவை மிக அதிக விலையுடையவை. ஆனால் பயங்கரவாதத்துக்கு எதிரான போரில் நாம் வெற்றிபெற்றேயாகவேண்டியுள்ளது" - என்றார் புஷ்.

புதிய நிதி அதிகரிப்புடன் சேர்த்து அமெரிக்காவின் அடுத்த வருட பாதுகாப்புச் செலவு 3லட்சத்து 79 ஆயிரம் கோடி அமெரிக்க டொலர்களாகும். புதிய வரவு - செலவுத் திட்டம் அடுத்தமாதம் நான்காம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

புதிய பாதுகாப்பு வரவு - செலவுத் திட்டத்தில் புதிதாக 300 சமஷ்டிப் புலனாய்வு அதிகாரிகளை நியமிப்பதற்கும், இராசயன ஆயுதப் பரிசோதனைகளை மேற்கொள்வதற்கும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ம-4)



## ராஜீவின் மருமகன் வெளியிட்ட பரபரப்பான பத்திரிகை விளம்பரம்

இந்தியாவின் முன்னாள் பிரதமரான ராஜீவ்காந்தியின் மகள் பிரியங்காவின் கணவரான ரொபேட் வதேரா அண்மையில் வெளியிட்ட பத்திரிகை விளம்பரம் ஒன்று இந்தியாவில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

அந்த விளம்பரத்தில் தனக்கும் தனது தந்தை மற்றும் சகோதரருக்கும் இடையில் எந்தவிதமான தொடர்புகளும் இல்லை என்று தெரிவித்திருந்தார்.

இந்த விளம்பரம் குறித்து ரொபேட் வதேராவின் தந்தை கருத்துத் தெரிவித்தபோது கூறியதாவது:-

என் மகன் எனக்கு எதிராக பத்திரிகையில் வெளியிட்ட விளம்பரம் எனக்குப் பெரும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது. பத்திரிகையில் விளம்பரம் வந்ததை நானும் பார்த்தேன். விளம்பரம் வந்தபிறகுதான் அது குறித்து எனக்குத் தெரியும்.

ரொபேட் - பிரியங்கா திருமணத்தை நடத்துவதற்கு நான் எதிர்ப்புத் தெரிவித்திருந்தேன். இப்போதும் ராஜீவ் குடும்பத்தை நான் வெறுக்கின்றேன். இதுவே எனது மகன் விளம்பரம் வெளியிடக் காரணமாக இருந்திருக்கும் என்று நினைக்கின்றேன் - என்றார்.

ஆனால் ரொபேட் ராஜீவ்காந்தியின் மருமகன் என்ற நிலையைப் பயன்படுத்தி அவரது அப்பாவான ராஜீந்தர் வதேரா மூத்த காங்கிரஸ் கட்சித் தலைவர்களிடம் தனது நண்பர்கள் பலருக்கு வேலை வாங்கித் தரும்படி நெருக்குதல்கள் கொடுத்து வந்தார் என்றும் -

தனது மகனின் செல்வாக்கை முறைகேடாகப் பயன்படுத்த முயன்று வந்தார் என்றும் - காங்கிரஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

ஆனால் எனது மகனின் பெயரை நான் எப்போதும் முறைகேடாகப் பயன்படுத்தியதில்லை. என்னுடன் அவன் இப்போது பேசுவதில்லை. ஆனாலும் அவன் என் மகன்தான். என்மகனை என்னிடம் இருந்து பிரித்து விட்டார்கள். என்ன நடந்தாலும் நான் 'இத்தாலிய மாபியா' கும்பலுக்குப் பயப்படப்போவதில்லை என்று ரொபேட்டின் தந்தை தெரிவித்தார். அவர் 'இத்தாலிய மாபியா' என்று கூறியது சோனியாகாந்தி குடும்பத்தை என்பது குறிப்பிடத்தக்கது. (ம)



இஸ்ரேலிய இராணுவத்தின் தாக்குதலில் உயிரிழந்த ஹமாஸ் இயக்க உறுப்பினர் ஒருவரின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்ட ஹமாஸ் உறுப்பினர்கள் சிலர் தமது சகாவின் சடலம் அடங்கிய பேழையை தூக்கிச் செல்வதைப் படத்தில் காணலாம்.

## 'ஒக்ஸ்போட்' அகராதியில் ஆயுர்வேதச் சொற்கள்

ஆங்கில அகராதிகளில் முதன்மையானதாகக் கருதப்படும் 'ஒக்ஸ்போட்' அகராதியில் ஆயுர்வேதத்துடன் தொடர்புடைய சொற்கள் புதிதாகச் சேர்க்கப்பட்டுள்ளன.

KAPHA (கபம்), VATA (வாதம்), PITTA (பித்தம்), DOSHA (தோஷம்) ஆகியவை உட்பட சில சொற்கள் 'ஒக்ஸ்போட்' அகராதியில் சேர்க்கப்பட்டுள்ளன.

ஐரோப்பிய மக்களிடையே சமீப காலமாக ஆயுர்வேத மூலிகைத் தயாரிப்புகளான இயற்கை அழகு சாதனப் பொருள்கள், குளியல் சவர்க்காரங்கள போன்றவை பிரபலமாகி வருகின்றன. அதனால் ஆயுர்வேதச் சொற்களை மேலை நாட்டினர் பயன்படுத்தத் தொடங்கியுள்ளனர். அதனாலேயே ஆயுர்வேதச் சொற்கள் அகராதியில் சேர்க்கப்பட்டுள்ளன.

இந்தித் திரையுலகைக் குறிக்கும BOLYWOOD (பொலிவூட்) என்ற சொல் சில மாதங்களுக்கு முன்னர் 'ஒக்ஸ்போட்' அகராதியில் சேர்க்கப்பட்டது.

## பொது இடங்களில் பாலியல் உறவு: நோர்வேக்கு முதலிடம்

பெர்லின்,ஜன.25

பொது இடங்களில் பாலியல் உறவு கொள்பவர்கள் பற்றி ஜேர்மனியில் கணக்கெடுப்பு நடத்தப்பட்டது. 20 நாடுகளைச் சேர்ந்தவர்களிடம் கருத்துக் கேட்கப்பட்டது. ஒவ்வொரு நாட்டிலும் 400 பேரிடம் கேள்விகளைத் தொடுத்தார்கள்.

அவர்கள் கொடுத்த பதில் அடிப்படையில், நோர்வே நாட்டைச் சேர்ந்தவர்கள்தான் பொது இடங்

உலக அரங்கில்

களில் பாலியல் உறவு வைத்துக் கொள்வதில் அதிக ஆர்வம் காட்டுகிறார்கள் என்பது தெரியவந்தது.

கார், ரெயில் விமானம், கடற்கரை, பூங்கா, அலுவலகம், நூலகங்களில் அவர்கள் பாலியல் உறவு வைத்துக்கொள்கிறார்கள்.

2ஆவது இடம், ஆஸ்திரேலியாவுக்கும், 3ஆவது இடம் கிரீசுக்கும் கிடைத்திருக்கிறது.

இந்தப் பட்டியலில் பிரான்ஸ் தான் கடைசி இடத்தில் இருக்கிறது. (ம)



ஆபிரிக்க நாடான கொங்கோவில் எரிமலை வெடித்ததால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட கோமா நகர் தற்போது இயல்புநிலைக்குத் திரும்பிக்கொண்டிருக்கிறது. சூடு ஆறிப்போன எரிமலைக் குழம்பின் மத்தியில் கோமா நகர மக்களும் வாகனம் ஒன்றும் பயணம் செய்வதைப் படத்தில் காணலாம். நோள்களின் பின்னர் அவர்கள் தமது சொந்த இருப்பிடங்களுக்குத் திரும்புகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## இஸ்ரேல் விமானங்கள் தென்லெபனானில் தாக்குதல்

கெய்ரோ,ஜன.25

தென்லெபனானில் உள்ள ஹிஸ்புல்லாவின் நிலைகள்மீது இஸ்ரேலிய விமானங்கள் தாக்குதல் நடத்தியுள்ளன.

ஹிஸ்புல்லா அமைப்பினர் இஸ்ரேலிய எல்லைப் பாதுகாப்பு நிலைகளை நோக்கி ஷெல் தாக்குதல்களை நடத்தியதற்குப் பதிலடியாகவே இஸ்ரேல் விமானங்கள் தாக்குதல் நடத்தியதாக இஸ்ரேல் தெரிவித்தது.

மூன்று மாதங்களின் பின்னர் இஸ்ரேல் தெற்கு லெபனானில் நடத்திய முதலாவது தாக்குதல் இதுவாகும். இஸ்ரேல் விமானத் தாக்குதலுடன், ஆட்லறி ஷெல் தாக்குதல்களையும் நடத்தியதாக லெபனான் தரப்புத் தெரிவித்தது.

இந்தத் தாக்குதலில் எவரும் காயப்படவில்லை என்று ஜெருசலேமில் இஸ்ரேலிய இராணுவப் பேச்சாளர் சொன்னார். இழப்புக்கள் குறித்து லெபனானும் அறிவிக்கவில்லை.

மேற்குக்கரைப் பகுதியில் பலஸ்தீனர்களுடன் தீவிர மோதல்களில் ஈடுபட்டுவரும் இஸ்ரேல், மற்றொரு புறத்தில் லெபனானிலும் தாக்குதல்களை ஆரம்பித்துள்ளமை மத்தியகிழக்கில் வன்முறைகள் மேலும் அதிகரிக்கும் என்பதைக் கோடிகாட்டுவதாக அமைந்துள்ளது என்று அவதானிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர். (ம)

## அமெரிக்கரான தலிபான் போராளி தாய் நாட்டுக்குக் கூட்டி வரப்பட்டார்

வாஷிங்ரன்,ஜன.25

ஆப்கானிஸ்தானில் அமெரிக்கர்களால் கைதுசெய்யப்பட்ட அமெரிக்க தலிபான் போராளியான ஜோன் வோக்கர் லிண்ட் விசாரணைகளுக்காக அமெரிக்காவுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் அமெரிக்காவின் வேர்ஜினியா பெடரல் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

அமெரிக்கரான ஜோன் வோக்கர் (வயது 20) தலிபான் படையில் இணைந்து ஆப்கானிஸ்தானில் அமெரிக்கப் படைகளுக்கு எதிராகப் போரிட்டபோது அமெரிக்க கொமாண்டோக்களினால் கடந்த டிசெம்பர் முதலாம் திகதி கைதுசெய்யப்பட்டார்.

அரபுக் கடலில் தரித்து நிற்கும் அமெரிக்க யுத்தக் கப்பலான பட்டானாவில் தடுத்து வைக்கப்பட்டிருந்த வோக்கர் அங்கிருந்து கடந்த செவ்வாயன்று கந்தகாருக்குக் கொண்டு செல்லப்பட்டு, பின்னர் விமானம்மூலம அமெரிக்கா கொண்டுவரப்பட்டார்.

வோக்கர் தனது 16 ஆவது வயதில் - 1997ஆம் ஆண்டு - இஸ்லாம் மதத்துக்கு மாறினார் என்றும் -

கடந்த வருடமே அவர் தலிபான் அமைப்பில் இணைந்துகொண்டார் என்றும் - அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

ஆப்கானிஸ்தானில் அமெரிக்கப் பிரஜைகள் கொல்லப்படுவதற்கு உடந்தையாக இருந்தது, செப்ரெம்பர் 11இல் பின்லேடன் தலைமையிலான அல்கெய்டா நடத்திய பயங்கரவாதத் தாக்குதலுக்கு ஆதரவு வழங்கியது ஆகிய குற்றச்சாட்டுக்கள் தற்போது வோக்கர் மீது சுமத்தப்பட்டுள்ளது. (ம)

## இந்தோனேஷியாவில் கிளர்ச்சித் தலைவர் மோதலில் உயிரிழப்பு!

ஜகார்த்தா,ஜன.25

இந்தோனேஷியாவின் ஆச் மாநிலத்தில் பிரிவினை கோரிப் போராடி வரும் கிளர்ச்சிவாதிகளின் தலைவரைத் தாம் சுட்டுக் கொன்றுவிட்டதாக இந்தோனேஷிய இராணுவம் அறிவித்துள்ளது.

கிளர்ச்சித் தலைவரான அப்துல்லா ஷபி கொல்லப்பட்டதை அந்த அமைப்பின் பேச்சாளர் ஒருவர் உறுதிப்படுத்தியதாக பி.பி.ஸி. தெரிவித்தது.

இந்தோனேஷியாவின் வடக்குத் தீவான சுமத்திராவில் நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சண்டையில் ஷபியும் அவரது மனைவியும் கொல்லப்பட்டதாக இந்தோனேஷிய இராணுவப் பேச்சாளர் தெரிவித்தார்.

ஷபியும் அவரது மனைவியும் வேறு ஆறு 6 கிளர்ச்சியாளர்களும் தமது காட்டு முகாமில் தங்கியிருந்த போது, இராணுவத்தினரால் கொல்லப்பட்டதாகக் கிளர்ச்சிக் குழுப் பேச்சாளர் கூறினார். உடனடியாகவே புதிய தலைவர் ஒருவர் தமது அமைப்பைப பொறுப்பேற்றுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

ஷபி 1989ஆம் ஆண்டு முதல் சுதந்திர ஆச் இயக்கம் என்ற கிளர்சசி அமைப்பின் தலைவராக இருந்து வந்துள்ளார்.

கடந்த 26 ஆண்டுகளாக ஆச் மாகாணத்தில் நடைபெற்றுவரும் இராணுவத்துக்கு எதிரான கிளர்ச்சி நடவடிக்கைகளால் இதுவரை ஆயிரக்கணக்கான மக்கள் உயிரிழந்துள்ளனர். இந்த ஆண்டில் மட்டும் இதுவரை 100க்கும் குறையாதவர்கள் இங்கு உயிரிழந்துள்ளனர். (ம)

## இந்தியா – பாகிஸ்தான் நேரில் பேச வேண்டும்

### ஐ.நா.செயலர் வலியுறுத்து

இஸ்லாமாபாத்,ஜன.25

இந்தியாவும் பாகிஸ்தானும் தமக்கிடையிலான பிணக்கை நேரடிப் பேச்சுக்கள் மூலம் தீர்த்துக்கொள்ள வேண்டும் என்று ஐ.நா.செயலர் கோபி அனான் இரு நாடுகளையும் கோரி உள்ளார்.





பாகிஸ்தானுக்கு விஜயம் மேற்கொணடுள்ள அனான் செய்தியாளர்களிடம் பேசும் போது இதனைத் தெரிவித்தார்.

இந்த இரு நாடுகளும் தமக்கிடையில் பேசுவதன் மூலமே இந்தப் பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியும் என்று நான் கருதுகின்றேன். சில தினங்களுக்கு முன்னர் பாகிஸ்தான் அதிபர் அறிவித்த பயங்கரவாதிகளுக்கு எதிரான நடவடிக்கைகள் வரவேற்கத்தக்கன. பாகிஸ்தான் சரியானபாதையில்செல்ல ஆரம்பித்துள்ளது என்று நினைக்கின்றேன். அந்தப் பாதையில் அது தொடர்ந்து முன்னேற நாம் எமது ஆதரவைப் பாகிஸ்தானுக்கு வழங்கவேண்டும் - என்று அனான் மேலும் தெரிவித்தார்.

அனான் நேற்று பாகிஸ்தான் அதிபர் முஷாரப்பைச் சந்தித்துப் பேச்சு நடத்தினார். அவர் இன்று ஆப்கானிஸ்தானுக்குப் பயணமாகின்றார். (ம)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## அபூர்வ ஜோதிடம்

ஒரே பார்வையில் பல நோய்கள் குணப்படல், அதிர்ஷ்டம் பெறும் காலத்தைச் சரியாக அறிதல். தொடர்பு: சனி, ஞாயிறு 8.30 - 2.00 P.M ஆடியபாத வீதி, சரஸ்வதிமில் லேன், கொக்குவில் கிழக்கு. (97474)

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த அரசாங்க திணைக்களத்தில் நிரந்தர உத்தியோகஸ்தரான, சிவந்த நிறமுள்ள செவ்வாய் தோஷமற்ற 1970இல் பிறந்தவருக்கு அழகான மணமகள் தேவை. படம், ஜாதகக் குறிப்புடன் விண்ணப்பிக்கவும். பொருத்தமற்றவை திருப்பி அனுப்பிவைக்கப்படும். (சீதனம் எதிர்பார்க்கப்படமாட்டாது) விள.இல.1436, மே/பா.உதயன். (97473)

## திருத்துதல்

மூக்குக் கண்ணாடி ஒட்டுதல், சகல ஸ்ரில் கமரா வகைகள், எலக்ரோனிக் பிளாஸ்கன் என்பன திருத்துதல் ஆகிய வேலைகளுக்கு: சுநாராயணசாமி, 301, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (கன்னாதிட்டிச் சந்திக்கு அருகில் மேல்மாடி) (97418)

## வகுப்புகள்

தமிழ் தட்டெழுத்து, சுருக்கெழுத்து, ஆங்கில தட்டெழுத்து சனி, ஞாயிறு வகுப்புகள் 27.01.2002 ஆரம்பம். தொடர்பு: 5, அம்மன் வீதி (வைரவர் கோயில் முன்பாக), கந்தர்மடம், யாழ்ப்பாணம். (97493)

## விற்பனைக்கு

நல்லினப் புகையிலை நாற்று (வடமராட்சி கூரன்) மற்றும் மிளகாய் நாற்றுகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ந.சிவலிங்கம், பலாலி வீதி, உரும்பிராய் (பெற்றோல் செற் முன்பாக). (97492)

சொக்கட்டான் பந்தல், மணவறை, கதிரைகள், லான்ட்மாஸ்ரர் என்பன விற்பனைக்கு உண்டு. தொடர்பு: பொ.சற்குருநாதன், இல.8/1, பெருமாள் கோயிலடி, யாழ்ப்பாணம். (97494)

## தவறிவிட்டது

மாசார், பளையைச் சேர்ந்த பாலவடிவேலன் விஜிதா என்பவருடைய Njm mlil (y.765303435V) விசேட அ.அட்டை (இல.0915000626) என்பன நல்லூர் கந்தசுவாமி கோயில் பகுதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் பாலேந்திரா புடைவையகம், வைரவர் கோயிலடி (பஸ்நிலையம் முன்பாக) எனும் முகவரியில் ஒப்படைத்துதவவும். (97461)

ஊர்காவற்றுறை, நாரந்தனை கிழக்கைச் சேர்ந்த சிவநாமபிள்ளை தில்லைநாதன் என்பவருடைய தேசிய அ.அட்டை (இல.651352215V), விசேட அ.அட்டை (இல.091301080), நேவி அ.அட்டை, ஜொப் கார்ட் என்பன 20.01.2002இல் பருத்தித்துறை இல. 750 இ.போ.ச. பஸ் பயணத்தின் போது தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்படி முகவரியில் ஒப்படைத்துதவவும். (97462)

சென்.செபஸ்தியார் வீதி, கோண்டாவில் கிழக்கு கோண்டாவில் என்னும் முகவரியைச் சேர்ந்த இ.சந்திரனின் தேசிய அ.அட்டை (இல. 702321867X) திருநெல்வேலிக்கும் கோண்டாவில் சந்திக்கும் இடையில் 10.01.02இல் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்கூறிய முகவரியில் ஒப்படைத்து உதவவும். (97486)

சியானி சிவகுமாரன் என்பவருடைய தே.அ.அ. (இல. 828042955V) கோண்டாவில் கிழக்குப் பகுதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் திருமதி சி.செல்லத்துரை நாவலர் கட்டை ஒழுங்கை, கோப்பாய் வடக்கு, கோப்பாய் என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். (97495)

## பிரதேச செயலகம் அமைக்க காணி கொள்வனவு

தென்மராட்சி,ஜன.25

வடமராட்சி தெற்கு, மேற்கு, பிரதேச செயலகம் அமைப்பதற்குக் கரணவாய் மூத்தவிநாயகர் ஆலயத்தை அண்டியபகுதியில் 17 பரப்புக் காணி கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

இக்காணியில் பிரதேச செயலக பெயர்ப்பலகை நாட்டுதலும், காணிக்கு எல்லைச் சுவர்கள் அமைப்பதற்கான அத்திவாரக்கல் நாட்டுதலும் தைப்பூசமான எதிர்வரும் திங்கட்கிழமை 12.00 மணிக்கு இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (க-117)

---

# அழைப்புக் கட்டளை

## இல.16, பிரிவு 55 (1)

யாழ்ப்பாணம் என்னுமிடத்திலுள்ள மாவட்ட நீதிமன்றத்தில் வரையறுக்கப்பட்ட (ஜனதா) தியவர கம்பனி சாவல்கட்டு முகாமைத்துவ கூட்டிணைப்பு அலகு.
சாவல்கட்டு, முகாமைத்துவக் கிளை,
100 வீட்டுத்திட்டம், சாவல்கட்டு,
ஆனைக்கோட்டை.

வழக்கு இல.
நானாவிதம்/56

எதிர் வழக்காளி

1. நடராசா புவனேஸ்வரன்
2. இராஜரட்ணம் மனோகரன்
3. பூலோகராசா, கனகரட்ணம்
*மூவரும் குமுதினி, பாலர் பாடசாலை, சாவல்கட்டு, ஆனைக்கோட்டை.*
4. தவராசா விஜயகுமார்
5. இருதயநாயகம் சசிகுமார்
6. பூலோகராசா சுந்தரலிங்கம்
*மூவரும் மகாத்மா சனசமூக நிலையம், சாவல்கட்டு, ஆனைக்கோட்டை.*

*மேலே பெயர் குறிப்பிட்டுள்ள* *எதிராளி/கள்*

*எதிராளி/களுக்கு*
*மேலே பெயர் குறிப்பிட்டுள்ள வழக்காளி*

இதனோடிணைக்கப்பட்ட பிராது, சத்தியக்கூற்று ஆகியவற்றைக் கோரிய காரணங்களுக்காக அதில் கோரப்பட்ட நிவாரணங்களைப் பெறுவதற்காக,

இந்நீதிமன்றத்தில் உமக்கெதிராக வழக்குத் தொடர்ந்துள்ளாராதலினால், இதனோடிணைக்கப்பட்டுள்ள பிராதுக்கு உமது மறுமொழி ஏதேனும் இருப்பின், 2002ஆம் ஆண்டு மாசி மாதம் 05 ஆம் நாளன்று அல்லது அதன் முன்னர் நீதிமன்றத்திற் கோப்பிடும்படி இத்தால் நீவிர் தேவைப்படுத்தப்படுவதோடு சொல்லப்பட்ட தேதியன்று அல்லது அதன் முன்னர் நீவிர் மறுமொழி கோப்பிடத்தவறும் சந்தர்ப்பத்தில் வழக்கானது மறுகட்சிக்காரரில்லாமலே மேற்கொண்டு நடத்தப்பட்டு விளங்கப்படுமென அறிந்துகொள்ளுமாறு நீவிர் இத்தால் தேவைப்படுத்தவும்படுகின்றீர்.

பதிவுபெற்ற தரணிமூலம் நீர் தோன்றாவிடில், சட்டமுறையான எல்லா அறிவித்தல்களும் சேர்ப்பிக்கப்படக்கூடிய முகவரியொன்றைக் கூறும் விவரக் குறிப்பொன்றைக் கோப்பிடுமாறு நீவிர் மேலும் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

நீதிமன்றக் கட்டளைப்படி,
து.சிறிமோகன்
*பதிவாளர்,*
*மாவட்ட நீதிமன்றம்,*
*யாழ்ப்பாணம்.*

**குறிப்பு:** *விளக்கத்திற்கு திகதியை நிர்ணயிப்பதற்காக பகிரங்க நீதிமன்றத்தில் இவ்வழக்கு எடுபடும் தேதி பற்றிய அறிவித்தலை நீவிர் பெறவிரும்பினால் பதிவுசெய்யப்பட்ட முகவரியொன்றை இந்நீதிமன்றப் பதிவாளரிடம் கொடுத்துதவுமாறும், பதிவஞ்சல் மூலம் அனுப்பிவைப்பதற்கும், சேவை மேவுவதற்குத் தேவைப்படும் முத்திரைகளைக் கொடுக்குமாறும், 80ஆம் பிரிவின் மூலம் நீவிர் தேவைப்படுத்தப்படுகின்றீர்.*

வரைபு
பவானி சற்குணராசா
*வழக்காளியின் சட்டத்தரணி.* 2002-01-23

து.சிறிமோகன்
பதிவாளர். (97497)

---

# முகாமைத்துவ உதவியாளர்களுக்கான பொதுக்கூட்டம்

பாடசாலைகளில் முகாமைத்துவ உதவியாளர்களாகக் கடமையாற்றுபவர்கள் தமது பதவியை உறுதி செய்து கொள்ளவும், அமைச்சருடனான சந்திப்புக்கு மகஜரில் கையொப்பம் இடுவதற்குமான பொதுக்கூட்டம் நாளை (26.01.2002) சனிக்கிழமை பி.ப. 3.00 மணியளவில் ஆரியகுளம் புதிய உயர் கல்விக் கல்லூரியில் நடைபெறும். அனைவரும் தவறாது சமுகம் தருமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

தலைவர்
கி.கிருஷ்ணகுமார்
முகாமைத்துவ உதவியாளர் சங்கம்.

(97467)

---

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

| வைகாசி | தை |
|---|---|
| 26 | 25 |
| - | - |
| 04 | 12 |
| - | - |
| 1943 | 2001 |



## அமரர் தம்பையா நவரத்தினம்

(சந்திரன்)

(புவனேஸ்வரி அம்பாள் லொறி உரிமையாளர்)

*பூத்துக் குலுங்கிய எங்கள் சோலைக்குள்*
*புயல் வந்து புகுந்து விட்டதே!*
*காத்து நின்ற காவல் மரம் நேற்று*
*காலனின் கோடரியால் வெட்டப்பட்டதே!*
*சீலம் மிகுந்த உங்கள் சிரித்த முகங்கண்டு*
*காலமெல்லாம் கவலை மறந்திருந்தோம்*
*உங்களால் - உங்களுடன் வாழ்ந்த நாள்களில்*
*நினைவுகள் எங்கள் உயிரை உலுப்புதையா!*
*ஆயிரம் ஜென்மங்கள் அடுத்து வரினும்*
*தேயாத ஒளி நிலவே! எம் தெய்வம் நீங்கள் தாம்!*

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் நேற்று (24.01.2002) வியாழக்கிழமை வில்லூன்றித் தீர்த்தக் கரையில் நடைபெற்றன.

இன்று (25.01.2002) வெள்ளிக்கிழமை மதியம் 12 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்தியத்திலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*பட்டின சபை வீதி,*
*மானிப்பாய்.* (97458)

அன்னாரின் இழப்பால் துயருறும்:
- குடும்பத்தினர்.

---

# சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம் வருடாந்தப் பொதுக்கூட்டம்

மேற்படி கூட்டம் 27.01.2002ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு நெல்லியடி திருஇருதயக் கல்லூரியில் நடைபெறும். தவறாது அங்கத்தவர்கள் அனைவரும் கலந்துகொள்ளவும். 2ஆம் கட்ட நிதி கொடுப்பனவு பற்றிய முடிவு எடுக்கப்படும்.

ந.சிவபாலன் (*செயலாளர்*).
(97484) சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம்.

---

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளராக
பதவி உயர்வு பெற்றுள்ள
**திரு.வே.தி.செல்வரத்தினம்** அவர்களையும்

யாழ்.மாவட்ட மேலதிக கல்விப் பணிப்பாளராகப் பதவி
உயர்வு பெற்றுள்ள
**திரு.சி.சிவராசா** அவர்களையும்

பிரதிக் கல்விப்பணிப்பாளராக இருந்து கல்வி நிர்வாகப்
பணிக்குப் பதவி உயர்வு பெற்றுள்ள
**திரு.வி.அருளானந்தம்** அவர்களையும்

*இறையாசியுடன் மேலும் பதவி உயர்வுகள் பெற்று*
*கல்விப் பணிக்கு உழைத்திட மனமார வாழ்த்துகின்றோம்.*

அதிபர், ஆசிரியர்கள்,
யாழ்/கட்டைவேலி யார்க்கரு
விநாயகர் வித்தியாலயம்.

(97483)

---

# கட்டாணை

## யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றில்

வரையறுக்கப்பட்ட (ஜனதா) தியவர கம்பனி
சாவல்கட்டு கூட்டிணைப்பு அலகு
சாவல்கட்டு முகாமைத்துவக் கிளை
100 வீட்டுத் திட்டம், சாவல்கட்டு,
ஆனைக்கோட்டை.

வழ. இல. - நானாவிதம்/56

- வழக்காளி

எதிர்

1. நடராசா புவனேஸ்வரன்
2. இராஜரட்ணம் மனோகரன்
3. பூலோகராசா கனகரட்ணம்
*மூவரும் குமுதினி பாலர் பாடசாலை, சாவல்கட்டு, ஆனைக்கோட்டை.*
4. தவராசா விஜயகுமார்
5. இருதயநாயகம் சசிகுமார்
6. பூலோகராசா சுந்தரலிங்கம்
*மூவரும் மகாத்மா சனசமூக நிலையம், சாவல்கட்டு, ஆனைக்கோட்டை.*

- எதிராளிகள்

மேற்குறித்த 1ஆம், 2ஆம், 3ஆம், 4ஆம், 5ஆம், 6ஆம் எதிராளிகளுக்கு

*இவ்வழக்கு 22.01.2002 அன்று வழக்காளியின் சார்பில் சட்டத்தரணி திருமதி பவானி சற்குணராசாவின் அனுசரணையுடன் சிரேஷ்ட சட்டத்தரணி திரு.மு.திருநாவுக்கரசு முன்னிலையில் மாயிருக்க மேலதிக மாவட்ட நீதிபதி திருமதி ச.இளங்கோவன் அவர்கள் முன்னிலையில் ஆதரிக்கப்பட்டபோது, வழக்காளியின் பிராது, சத்தியக்கூற்று, ஆவணங்கள் வ1 தொடக்கம் வ வரை 21.01.2002ஆம் திகதி சமர்ப்பவம் ஆகியவை பரிசீலிக்கப்பட்டு, இவ்வழக்காளியினால் "சாவல்கட்டு முன்பள்ளி" என்ற பாலர் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டு நடத்தப்படுவதை மேற்கூறப்பட்ட எதிராளிகளோ அவர்களின் முகவர்கள், ஏவலாளர்கள், தங்குநர்கள், காட்டுநர்களோ, வேலையாள்களோ அல்லது அவர்களின் குமுதினி பாலர் பாடசாலை, மகாத்மா சனசமூக நிலையம் ஆகிய அமைப்புகளைச் சார்ந்த எவருமோ தவிர்த்தோ ஒருமித்தோ தடைசெய்யக்கூடாதென்று கட்டுப்படுத்தி இதனால் உங்களுக்கும் உங்களைச் சார்ந்த மேலே விவரிக்கப்பட்ட எவருக்கும் எதிராக இக்கட்டாணை பிறப்பிக்கப்படுகிறது.*

*இக்கட்டாணையை மீறினால், இந்நீதிமன்றத்தை அவமதித்த குற்றத்துக்காக நீவிர் தண்டிக்கப்படுவீர் என இத்தால் உமக்கு எச்சரிக்கை செய்யப்படுகிறது. இக்கட்டாணை 22.01.2002 தொடக்கம் 14 நாள்களுக்கு வலுவில் இருக்கும்.*

*வரைவு:*
பவானி சற்குணராசா,
*வழக்காளியின் சட்டத்தரணி.*

மேலதிக மாவட்ட நீதிபதி,
Mrs.S.Ellengovan.
ADD. DISTRICT JUDGE,
DISTRICT COURT,
JAFFNA. (97496)

---

# மரண அறிவித்தல்

## காசிநாதர் நமசிவாயம்

*(ஓய்வுபெற்ற பிரதம லிகிதர், நிதிப்பகுதி கிறைசேரி)*

துன்னாலை வடக்கைப் பிறப்பிடமாகவும், கொழும்பையும் லண்டனையும் வசிப்பிடமாகவும் கொண்ட காசிநாதர் நமசிவாயம் 21.01.2002 திங்கட்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் துன்னாலை காசிநாதர் வித்தியாசாலை ஸ்தாபகர், காலஞ்சென்றவர்களான காசிநாதர், நாகமுத்துவின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் (OA), மனோன்மணியின் மருமகனும் மதுரமீனாட்சியின் அன்புக் கணவரும் விமலாவதி (U.K.), காசிநாதன் (கணக்காளர், ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் சாந்தலிங்கம் (பொறியியலாளர், U.K.), சுந்தரராணி (ஆஸ்திரேலியா) ஆகியோரின் மாமனாரும் காலஞ்சென்ற கனகசபாபதி மற்றும் திருமதி செ.செல்லம்மா, திருமதி வே.இலட்சுமி அம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும் ரகுசாந்த் (U.K.), சுமதி (U.K.), ஹரன்நாத் (ஆஸ்திரேலியா), அஞ்சலி (ஆஸ்திரேலியா), அஸ்வினி (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

இறுதிச் சடங்குகள் 26.01.2002 சனிக்கிழமை காலை லண்டனில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*Thames Croft Garden*
*Park Hill*
*Croydon - Cro 5JR*
*Surrey, U.K.*
*Tel. No.: 0044 208 6863356* (97488)

தகவல்:
திருமதி வே.இலட்சுமி அம்மா
(சகோதரி),
*வல்லியானந்தம்*
*துன்னாலை வடக்கு.*

உதயன்

## மீனவர்களின் குரலுக்கு செவிசாய்ப்போம்!

குடாநாட்டு மீனவர்கள் தம் மீது விதிக்கப்பட்டிருக்கும் கட்டுப்பாடுகளை உடைத்துக்கொள்வதற்காகக் கிளர்ந்தெழுந்து போராட்டத்தில் குதிக்கப்போவதாக எச்சரித்திருக்கின்றனர்.

கடலில் மீன்பிடிப்பது தொடர்பாக விதிக்கப்பட்டிருக்கும் சகல கட்டுப்பாடுகளையும் உடனடியாக நீக்கி, மீனவர்கள் சுதந்திரமாக மீன்பிடிக்க அனுமதிக்கப்படவேண்டும். இன்றேல் எதிர்வரும் 30ஆம் திகதிமுதல் யாழ்.செயலகம் முன்பாகத் தொடர்ச்சியான உண்ணாவிரதப்போரில் குதிப்போம்.

- இவ்வாறு வடமாகாண கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசமும், வடமராட்சி கடற்றொழிலாளர் சங்கமும் கூட்டாக முன்னறிவிப்புச் செய்திருக்கின்றன.

மீன்பிடித் தடைகளை நீக்க உருப்படியான நடவடிக்கைகளை எடுப்பதை விடுத்து, நிவாரணம் வழங்குவதாகக்கூறி காலத்தைக் கடத்தி, மீனவர் சமூகத்தை இனியும் அரசு ஏமாற்றமுடியாது. முந்திய அரசின் ஆட்சிக்காலத்தில் மட்டுமன்றி தற்போதைய ஆட்சியிலும் எமது துன்பங்கள் தொடர்கதையாகியுள்ளன - என்று யாழ். மீனவர்கள் விரக்தியும், விசனமும் வெளியிட்டிருக்கின்றனர்.

தமிழீழ விடுதலைப் போராட்டம் தீவிரமடைந்த காலம்முதல் குடாநாட்டின் மீனவர் சமூகம் அனுபவித்துவரும் அவலங்கள் வெறும் வார்த்தைகளால் வெளிப்படுத்த முடியாதவை. தொழில் செய்வதற்கான தடைகள், கட்டுப்பாடுகள் தவிர பெரும் உயிர் ஆபத்துக்கும் அவர்கள் நாளாந்தம் முகங்கொடுத்து வந்துள்ளனர். ஏராளமான மீனவர்கள் தொழிலின்போது ஸ்ரீலங்கா அரச படைகளின் கொடூரத் தாக்குதல்களில் சிக்கி, கடலிலே இரத்தம் சிந்தியிருக்கிறார்கள்; தங்கள் உயிர்களை இழந்திருக்கிறார்கள்.

குடாநாட்டின் மூலாதாரமான இயற்கை வளங்களில் பிரதானமானது கடல்வளம் - கடல் உணவு வளம். கடந்த இரு தசாப்தத்துக்கும் கூடிய காலத்தில் போர் தீவிரமடைந்த எல்லாச் சந்தர்ப்பங்களிலும் அதன் கொடூரங்களால் முதலில் தாக்குண்டவர்கள் குடாநாட்டின் கரையோரப் பிரதேசங்களில் வசிக்கும் இந்த மீனவர்கள்தான்.

ஆட்சியில் இருந்த அரசுகள் மீனவர்களின் பிரச்சினைகளை - அவர்களது வாழ்வு அவலங்களை - தீர்த்து, நிவாரணம் வழங்குவதற்குப் பதிலாக அந்த மக்களைப் பாதுகாப்பு என்ற பெயரில் மேலும் நசுக்கி அடக்கி ஒடுக்க முற்பட்டதுதான் வரலாறு.

கடந்த பொதுத் தேர்தலும் அதனால் ஏற்பட்ட ஆட்சி மாற்றமும் அதன் தொடர்ச்சியாக நாட்டில் தோன்றியிருக்கும் சமாதானச் சூழலும் வடக்கு - கிழக்கு மக்களின் வாழ்வில் நம்பிக்கை ஒளியைப் பாய்ச்சியுள்ளபோதிலும், பல்லாயிரக்கணக்கான குடாநாட்டு மீனவர்களின் வாழ்வு நிலையில் இன்னமும் மாற்றங்களைக் காணமுடியவில்லை.

மீன்பிடிப்பதற்கான தடைகள், கட்டுப்பாடுகளை நீக்குவோம்; மீனவர் வாழ்வில் விடிவை ஏற்படுத்துவோம் என்றெல்லாம் புதிய ஆட்சியாளர்களும், குடாநாட்டு மக்களின் பிரதிநிதிகளான அரசியல்வாதிகளும் பொதுத் தேர்தல் காலத்தில் வாக்குறுதிகளை அள்ளி வீசியிருந்ததை எவரும் மறந்திருக்க மாட்டார்கள்.

ஆனால், ஆட்சிமாற்றம் ஏற்பட்டு சுமார் ஒன்றரை மாதகாலம் கடந்துவிட்ட பின்னரும்கூட மீன்பிடித் தடைகள், கட்டுப்பாடுகள் நீக்கப்படவில்லை. இந்த நிலைமையிலேயே தம்மீதான தடைகளை உடைக்கத் தாங்களாகவே போரில் குதிக்க மீனவர்கள் தீர்மானித்திருக்கிறார்கள்.

மீனவர்களின் ஒன்றுதிரண்ட குரலுக்கு வலுச்சேர்க்க குடாநாட்டின் மனிதநேய அமைப்புகளும் பொது நிறுவனங்களும் முன்வர வேண்டும்.

# புலிகள் மீதான தடையை நீக்க நான் இணக்கம் தெரிவிக்கவில்லை

## அஸ்கிரிய பீடாதிபதி விளக்கம்

கண்டி,ஜன.25

விடுதலைப் புலிகள் இயக்கம் மீதான தடையை நீக்கத் தான் இணங்கவில்லை என்று அஸ்கிரிய பீடாதிபதி வண.உடுகம ஸ்ரீ புத்தரக்பித தேரர் கூறுகிறார்.

புலிகள் இயக்கத் தடையை நீக்க நான் இணங்கினேன் என்றும், வடக்கு - கிழக்கில் சுயாட்சி வழங்குவது தவறல்ல என்றும் நான் கூறியதாகப் பத்திரிகைகளில் வெளியான செய்திகள் உண்மைக்குப் புறம்பானவையாவும். அவ்வாறு எதையும் நான் கூறவில்லை.

விடுதலைப் புலிகள் நிபந்தனையின்றி, சமாதானப் பேச்சுக்கு இணங்கினால் அவர்கள் மீதான தடையை நீக்குவது அரசின் பொறுப்பாகும் என்றும், வெளிநாடுகள் விதித்துள்ள தடை குறித்து அரசாங்கம் தலையிடக் கூடாது என்றுமே கூறினேன்.

வடக்கு - கிழக்கு நிர்வாகம் குறித்து ஏதாவது ஆறுதலளிக்கும் முடிவு ஒன்று வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கூறினேன்.

- இவ்வாறு அஸ்கிரிய பீடாதிபதி அறிக்கையில் தெரிவித்திருக்கிறார்.(க)

## இராமலிங்க வள்ளலார் பெருவிழா

தென்மராட்சி,ஜன.25

சாவகச்சேரி வித்தக நிலையத்தினரும் வதிரி முத்துக்குமாரசுவாமி ஆலயத்தினரும் இணைந்து நடத்தும் ஸ்ரீ இராமலிங்க வள்ளலார் பெருவிழா எதிர்வரும் 28ஆம்திகதி காலை 6 மணி தொடக்கம் வதிரி முத்துக்குமாரசுவாமி ஆலய மண்டபத்தில் வி.இராசையா தலைமையில் நடைபெறும்.

கரவெட்டி பிரதேச செயலர் செ. ஸ்ரீநிவாசன், ஆ.சிவநாதன், ஞானேந்திரன் ஆகியோரின் சிறப்புச் சொற்பொழிவும், கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர் சங்கதபூஷணம் செ.குமாரசாமியின் தெய்வீக இசை விருந்தும் மாலிசந்தி காமாட்சி அம்பாள் ஆலயகுழு, சாவகச்சேரி வித்தகம் பஜனைக் குழு ஆகியவற்றின் பஜனைகளும் வள்ளலாரின் திருவருட்பா ஓதுதல் ஆகியவையும் இடம்பெறும். (ம-117)

# நாட்டு நடப்பு

### யாழ்நகர்க் காட்சி - 2

தெருவெல்லாம் குப்பை சேர்ந்து திரட்டியே மலைபோல் சேர
ஒருபெரும் இந்துக் கல்லூரி யண்டை ஓரமாய்க் கொட்டிவிட
அருகினில் கல்லூரி ஆசான்மார் அயராது நுளம்பை ஓட்ட
திருவுடை இளைஞர் எல்லாம் திரள்கிறார் மருந்து தேடி.

தெருவோரம் புல்லு பற்றை செருக்குவார் யாருமில்லை
ஒரு சேர அயலார் கூடி ஒருபோதும் அழிப்பதில்லை
இருக்குது நமக்கு வேலை இப்பணி நமது அன்று என்பார்
ஒரு சேர காய்ச்சல் வாட்ட உயிர்பிரிய வாடுறாரே.

- விகடகவி

# நல்லெண்ண நடவடிக்கையாக மீன்பிடித் தடையை நீக்கவேண்டும்

## யாழ்.மாநகரசபை உறுப்பினர் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஜன.25

விடுதலைப் புலிகள் யுத்த நிறுத்தத்தைக் கடைப்பிடித்து நல்லெண்ண நடவடிக்கையில் ஈடுபடுகின்றனர். அதேபோன்று படையினரும் நல்லெண்ண நடவடிக்கையாக மீன்பிடித் தடைகளை நீக்க முன்வர வேண்டும் என்று புளொட் அமைப்பின் உறுப்பினர் கேட்டுள்ளார்.

அந்த அமைப்பின் யாழ்.மாநகர சபை உறுப்பினரும் மணிபுரி உதயபுர கடற்றொழிலாளர் சங்கச் செயலாளருமான எஸ்.ஜெயச்சந்திரன் விடுத்துள்ள அறிக்கையில் இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யாழ்.குடாநாட்டில் மீனவர்களைப் பெரிதும் பாதிப்புக்குள்ளாக்கியுள்ள மீன்பிடித்தடை நீக்கப்படுமென கடந்த 14ஆம் திகதி ஹாட்லிக் கல்லூரியில நடைபெற்ற நிகழ்வொன்றில் அமைச்சர் ஜயலத் ஜெயவர்த்தனா உறுதியளித்திருந்தார். ஆனால் இன்றுவரை எந்தவொரு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரியவில்லை. இனப்பிரச்சினை ஆரம்பித்த காலம் தொட்டு இன்றுவரை தொடர்ந்து பாதிக்கப்பட்டுக்கொண்டிருப்பவர்கள் கடற்றொழிலாளர்களே. அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் யுத்தநிறுத்தம் தொடர்ந்துகொண்டிருக்கும் இவ்வேளையில், வன்னிக்கான பொருளாதாரத்தடை ஓரளவு நீக்கப்பட்டு, பொருள்கள் அனுப்பிவைக்கப் படுகின்றன. யுத்தம் காரணமாக ஏற்படுத்தப்பட்ட மீன்பிடித் தடையை யுத்த நிறுத்தம் ஏற்படுத்தப்பட்டுள்ள காலங்களில் நீக்குவது பாரதூரமான தவறானவிடயமல்ல.

இலங்கை, கடலால் சூழப்பட்ட ஒரு தீவாகும். இங்கு மீன்பிடித் தொழில் அனைத்துக் கரையோரப் பிரதேசங்களிலும் மேற்கொள்ளப் படுகின்றது. புலிகளின் நடமாட்டம், நடவடிக்கைகள் கடற்பரப்பு முழுவதிலுமே இன்று காணப்படுகின்றது. இந்நிலையில் யாழ்.குடாநாட்டு மீனவர்களுக்கு மட்டும், தடைவிதித்து கட்டுப்படுத்தி அவர்களின் அன்றாட வாழ்க்கையைச் சீர்குலைத்து வறுமைக்குள்ளாக்குவது எவ்வகையிலும நியாயமானதொன்றல்ல.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்கு படையினரின் (கைதிகளாக உள்ள) உறவினர்கள், சிங்கள அமைப்பு பிரதிநிதிகள் உட்பட ஆயிரக்கணக்கானோர் சென்று வருகின்றனர். விடுதலைப் புலிகள் யுத்தநிறுத்தத்தைக் கடைப்பிடித்து நல்லெண்ணத்துடன் செயற்படும்போது படையினர் மட்டும் தொழில் தடைகளைத் தளர்த்தாது, தமிழ் மக்களை கஷ்டத்துக்குள்ளாக்குவது ஏன்?

குறைந்தபட்சம் மீன்பிடிப்பதற்கு வழங்கப்பட்டிருக்கும் தூரம், நேரம் என்பவற்றையாவது அதிகரித்து, எது வித காரணங்களையும் முதன்மைப் படுத்தாது அனைவருக்கும் அனுமதி வழங்கப்படவேண்டும் - என்றுள்ளது. (க-3)

## விவசாய நடவடிக்கைக்கு ஊறு விளைவிக்காது

# கால்நடைகளை கட்டி வளர்க்குமாறு யாழ்.மாநகர மேயர் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஜன.25

யாழ்மாநகரசபைப் பகுதியில் விவசாயச் செய்கையை நாசம் செய்து வரும் ஆடு, மாடு போன்ற கால்நடைகளைக் கட்டிவளர்க்குமாறு யாழ். நகர மேயர் செல்லன் கந்தையன் பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

கட்டாக்காலியாகத் திரியும் ஆடு, மாடுகள் தமது விவசாயச் செய்கையை அழித்து வருவதாக முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்றும் - விவசாயச் செய்கைக்கு ஊக்கம் அளிக்கும் வகையில் பொதுமக்கள் தமது கால்நடைகளைக் கட்டி வளர்க்க வேண்டும் என்றும் - அவர் கேட்டுள்ளார்.

மக்கள் இதனைக் கவனத்தில் எடுக்கத் தவறினால், கட்டாக்காலியாகத் திரியும் கால்நடைகளைப் பிடித்துக் கட்டி, தண்டம் அறவிடுவதென்ற மாநகரசபையின் தீர்மானத்தை அமுல் செய்யவேண்டிய நிலை ஏற்படும் என்று அவர் தெரிவித்துள்ளார். (க-3)

# 'சார்க்' நாடுகளின் பயணிகளுக்கு விமான நிலையத்தில் விசா!

கொழும்பு,ஜன.25

ஏனைய தெற்காசிய நாடுகளின் பிரஜைகள் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வந்திறங்கியதும் விசா வழங்கப்படுகிறது. இந்த முறையை இலங்கை நேற்றுமுன்தினம் முதல் நடைமுறைக்குக் கொண்டுவந்தது.

'சார்க்' அமைப்பைச் சேர்ந்த தெற்காசிய நாடுகளின் உல்லாசப் பயணிகள் விமான நிலையத்தை வந்தடைந்ததும் விசா வழங்கப்படும் என்று உல்லாசப் பயணத்துறை அமைச்சர் காமினி லொக்குகே அறிவித்திருக்கிறார்.

இப்பயணிகள் விமான நிலையத்தில் ஒரு மாதத்துக்கான உல்லாசப் பயண விசாவைப் பெறலாம் என்றும் அமைச்சர் கூறினார்.

பங்களாதேஷ், பூட்டான், இந்தியா, மாலைதீவு, நேபாளம், பாகிஸ்தான் ஆகிய நாடுகளின் பயணிகளுக்கு இவ் விசா வழங்கப்படும். உல்லாசப் பயணிகளைக் கவரவே இந்தப் புதிய முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. (க)

# தேங்காய் திருடும் நபர்கள் தென்மராட்சியில் அட்டகாசம்

## தடுக்கமுற்படுவோருக்கு கத்திவெட்டு

தென்மராட்சி,ஜன.25

தென்மராட்சிப் பகுதியில் தேங்காய் திருடச் செல்வோரின் கத்தி வெட்டுக்கு இலக்காகிப் படுகாயமடையும் பொதுமக்கள் தினமும் மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுவருகின்றனர்.

கடந்த 20ஆம் திகதி மிருசுவில் வடக்குப் பகுதியில் சிவஞானசுந்தரம் சிவகாந்தன்(வயது 28), 21ஆம் திகதி - கிருஷ்ணன் தர்மபாலன் (வயது 27), 22ஆம் திகதி - மிருசுவில் தவசிக்குளம் பகுதியில் பி.யோகராசா (வயது 42) ஆகியோர் கத்தி வெட்டுக்கு இலக்காகியுள்ளனர்.

தேங்காய்த் திருட்டைத் தடுக்க முயன்ற இருவரின் வீடுகளும் எரிக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது. (ம-117)

# காலாவதியான பிஸ்கெட்டுகள் சுகாதாரப் பகுதியினரால் அழிப்பு

யாழ்ப்பாணம்,ஜன.25

யாழ்நகரப் பகுதி வர்த்தக நிலையங்களில் திடீர் பரிசோதனை நடத்திய யாழ்.மாநகரசபை சுகாதாரப் பரிசோதகர்கள் இரு நாள்களுக்குள் காலாவதியான 76 பிஸ்கெட் பைக்கற்றுகளை கைப்பற்றி அழித்துள்ளனர்.

வண்ணார்பண்ணை மற்றும் மின்சாரநிலைய வீதியில் இருந்த இரு வியாபார நிலையங்களிலேயே மேற்படி காலாவதியான பிஸ்கெட் பைக்கற்றுகள் கண்டுபிடிக்கப்பட்டன.

அண்மைக்காலமாக காலாவதியான உணவுப் பொருள்களை விற்பனை செய்யும் வர்த்தகர்களுக்கு எதிராக நீதிமன்றங்களில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கதாகும். (ம-6)

### நாளை

தை 13
சனிக்கிழமை
(26-01-2002)
திதி :துவாதசி
முற்பகல் 9.35 வரை.
நட்சத்திரம்: மிருகசீரிடம்
முற்பகல் 10.34 வரை.
சனிப்பிரதோஷ விரதம்
சுபநேரம் : 3.36 - 5.06
ராகுகாலம் : 9.06 - 11.06
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

இருதயம் மட்டும் உறுதியாக இருந்தால் சுண்டெலியால் கூடப் பெரிய சாதனையைச் செய்ய முடியும்.

## 'பொங்குதமிழ்' நிகழ்வின் ஓர் அங்கமாக

# 5ஆயிரம் மரக்கன்றுகள் குடாநாட்டில் விநியோகம்

யாழ்ப்பாணம்,ஜன.25

யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் 'பொங்குதமிழ்' நிகழ்வின் ஓர் அங்கமான மரநடுகைத் திட்டத்தின்கீழ் ஐயாயிரம் மரக்கன்றுகள் விநியோகிகப்பட்டுள்ளன.

இரண்டாயிரம் தென்னம் நாற்றுக்களும் 3 ஆயிரம் நிழல்தரு மரக்கன்றுகளும் பரவலாக சகல பகுதிகளுக்கும் விநியோகிக்கப்பட்டுள்ளன என்றும் -

நூலகங்கள், பாடசாலைகள், பொது அமைப்புக்களுக்கு இந்த மரக்கன்றுகள் வழங்கப்பட்டுள்ளன என்றும் - மாணவர் ஒன்றியப் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்.

கடந்த 20 வருட காலமாக குடாநாட்டில் தொடர்ந்துகொண்டிருக்கும் யுத்தத்தால் லட்சக்கணக்கான பயன்தரு மரங்கள் அழிக்கப்பட்டுள்ளன என்றும் -

குடாநாட்டின் இயற்கை வளம் முழுமையாக அழிந்துவிடும் சூழநிலை உருவாகி வருவதாலேயே பல்கலைக்கழக மாணவர்கள் இந்த மரநடுகைத் திட்டத்தை ஆரம்பித்து வைத்திருப்பதாகவும் - மாணவர் ஒன்றியப் பிரதிநிதி மேலும் தெரிவித்தார்.

குடாநாடு முழுவதிலும் சுமார் ஒரு லட்சம் மரக்கன்றுகளை நடுவதை இலக்காகக் கொண்டே தாம் இந்த மரநடுகைத் திட்டத்தை ஆரம்பித்துள்ளதாகவும் மாணவர் ஒன்றியத்தின் பிரதிநிதி தெரிவித்தார். (ம-6)

உ

மிசாலை

**திருநீலகண்ட வெள்ளை மாவடிப் பிள்ளையார் கோயில்**

## பிராயச்சித்த கும்பாபிஷேகம்

அடியார்களே!

எதிர்வரும்(27-01-2002) ஞாயிற்றுக்கிழமை மாலை 5.00 மணிக்கு பூர்வாங்கக் கிரியைகள் ஆரம்பமாகி 28-01-2002 திங்கட்கிழமை தைப்பூச நன்னாளில் பகல் 10.30 மணி முதல் வரும் சுபவேளையில் பிராயச்சித்த கும்பாபிஷேகம் நடைபெறத் திருவருள் கைகூடியுள்ளது.

அடியார்கள் இத்தினங்களில் விநாயகப் பெருமானைத் தரிசித்து அருள்பெற்றுய்யுமாறு வேண்டுகின்றோம்.

(97429) - தர்மகர்த்தா சபையினர்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம்
14 - 05 - 1938



மறைவு
24 - 12 - 2001

**அமரர் கந்தசாமி இரத்தினவடிவேலு (ஆனைல் மாமா)**
*(இளைப்பாறிய ஆசிரியர் - சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி)*

"அன்புடனும் பண்புடனும் வாழ்ந்து மறைந்து
விட்டீர் ஆனைல் மாமா!
நீங்கள் மறைந்தாலும் உங்கள் அன்பு முகத்தை
மறக்க முடியாது ஆனைல் மாமா!"

அன்னாரின் இறுதிச்சடங்கில் கலந்துகொண்டவர்கள் அனைவருக்கும் எங்கள் நெஞ்சம் நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம். அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
மனைவி: இ. தனலட்சுமி
மகள்: இ. பாலகுமாரி
சகோதரர்: க. ஞானசுந்தரம் (கனடா)
க. செல்வநாயகி (கொக்குவில்)
மைத்துனி: ஞா. அருந்தவம் (கனடா)
மருமக்கள்: 1. சந்திரமனோகரன் (Ari Lanka Planning Officer)
2. ச. சந்திரபாலன் Hatton National Bank Retired)
3. Doctor P.K.இரவீந்திரன் (Necombo Hospital)
4. Doctor P.K.சத்தியேந்திரன் (Teaching Hospital KALUBOWILA, Dehiwela.

தகவல்:
திரு.திருமதி
சந்திரபாலன் - பிறேமா,
"சங்குபதி"
கே.கே.எஸ். வீதி,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில். (97412)

## மூன்றாண்டு நினைவலைகள்

பூவாக
07 - 05 - 1926



புனிதையாக
25 - 01 - 1999

### திருமதி மனுவல் செல்லம்மா

*(காங்கேசன்துறை)*

ஆண்டுகள் அடுத்தடுத்து
மூன்றுகள் ஓடிடினும்
தாயே உன்நினைவு
சேயெமை விட்டகலவில்லை
எங்களது நெஞ்சமதில்
வேதனையோ விலகவில்லை
விழி தேடும் இடமெல்லாம்
உன் விம்பமே தெரிகிறது
வழி மீது விழி வைத்தோம்
வாராயோ அன்னையே நீ
கண்கள் தினம் சொரியும்
கண்ணீர்ப் பூக்களாகவே
அஞ்சலி செய்கின்றோம்
அன்னையே நீ என்றும்
ஆண்டவனில் அமைதி கொள்வாய்.

'அழகுநிலா'
கல்லூரி வீதி,
இளவாலை.
T.P.070-212532

(C-20449)

பிரிவால் துயருறும்
கரோலிஸ் மனுவல்
குடும்பத்தினர்.

## ஜோசப்வாஸ் யாத்திரைத்தல பெருவிழா

யாழ்ப்பாணம், தொட்டடி பண்ணையில் அமைந்துள்ள ஜோசப்வாஸ் யாத்திரைத்தல வருடாந்தப் பெருவிழா கடந்த 23ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

நாளை சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு நற்கருணை வழிபாடு இடம்பெறும். நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு திருநாள் திருப்பலியை யாழ். ஆயர் தோமஸ சவுந்தரநாயகம் ஆண்டகை ஒப்புக்கொடுப்பார். புனிதரின் ஆசீருடன் விழாநிறைவு பெறும். (க)

**UNIVERSITY OF JAFFNA, SRI LANKA**

**FACULTY OF GRADUATE STUDIES**

Master of Arts in Cultural Studies

Faculty of Guaduate Studies, University of Jaffna will entertain applications from Graduates of recognized Universities up to 2002.02.25 for the above mentioned course.

The Master of Arts in Cultural Studies Programme is of one year duration.

Lectures are conducted on weekdays evenings and Saturdays.

Medium of instruction: Tamil

Fees:

Course Fee: Rs.20,000/-

Application Fee: Rs. 100/-

Registration Fee: Rs. 750/-

Libruary Fee: Rs. 750/- Per year.

Libruary Deposit; Rs. 1,000/- (Refundable)

Course Fee should be paid in full at the time of enrolment.

Those who wish to obtain the application forms in person are required to produce a receipt from People's Bank University Branch, or Shroff, Finance Branch of the University of Jaffna on a payment of Rs.100/- per form.

Those who wish to obtain the forms by post are requested to sent a Money Order / Postal Order for Rs. 100/- drawn in favour of Bursar, University of Jaffna together with a self-addressed Rs.3.50/- stamped envelope of 23x10 cm size.

Completed applications should be submitted to the Dean's Office, Faculty of Graduate Studies, University of Jaffna on or before 2002.02.25

24-01-2002 REGISTRAR

## முதலாம் ஆண்டில் முகிழ்க்கும் நினைவுகள்

மண்ணில் மலர்வு
05 - 10 - 1908



விண்ணில் மலர்வு
05 - 02 - 2001

அமரர்

## வேலாயுதர் ஆறுமுகம்

*(உரிமையாளர் ஆறுமுகம் தேநீர்ச் சாலை, சாவகச்சேரி.)*

*திதி: 25-01-2002*

இறையடியிற் பெற்றிடுக என்றும் சாந்தி
கண்ணியமாய்த் தொழில்செய்து கருத்தொடுநல் வழிகாட்டி
கவின்புங்கை நகர்மேன்மை கனவினிலே தேக்கிவைத்து
எண்ணரிய பணிகளைமுன் எடுக்கவென உதவிநின்று
ஏதிலியா யலைபவர்கள் தழைக்குதவி நிதம்செய்து
பண்ணியநற் செயல்களினால் பாரினிலே புகழெய்தி
பவித்திரமாய் வாழ்வேலா யுதர்ஆறு முகம்என்னும்
புண்ணியனே! ஓராண்டு போனாலும் உம் நினைவு
போகாதே! இறையடியிற் பெற்றிடுக என்றும் சாந்தி!

மனைவி, மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

புங்குடுதீவு. 01. (97454)

யாழ்ப்பாணம்

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்

வரையறுள்ளது

## பொது முகாமையாளர் பதவிக்கான வெற்றிடம்

01. சம்பள அளவுத் திட்டம் -
101-7 - 31/99க்கமைய 5500 - 8200
130X10 - 140X10

02. தகைமைகள்:-
(1) கூட்டுறவுச் சங்க ஊழியர் 8ஆம் சம்பளத்திட்ட பதவி ஒன்றில் 3 வருடங்களுக்குக் குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுச் சங்க ஊழியர் 9ஆம் சம்பளத்திட்ட முகாமை மட்ட அல்லது மேற்பார்வை மட்ட பதவி ஒன்றில் 06 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்,
அல்லது
(2) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் பட்டதாரிச் சான்றிதழ் அல்லது இதற்குச் சமமான தகைமைகளுடன் அங்கீகரிக்கப்பட்ட/கைத்தொழில் நிறுவனமொன்றின் முகாமை மட்டப் பதவி ஒன்றில் 06 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்,
அல்லது
(3) கூட்டுறவுப் பணியாளர் தராதரப் பத்திரம் (உயர்தரம்) சான்றிதழ், க.பொ.த. (உயர்தரம்) மூன்று பாடங்களில் சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/கைத்தொழில் நிறுவனமொன்றின் முகாமை மட்ட பதவியொன்றில் 08 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

03. வயது - 30 தொடக்கம் 45 வரை

04. விண்ணப்ப முடிவு திகதி - 05.02.2002

05. பிணைப்பணம் - உரொக்கம் ரூபா 15,000/-
ஆதனப் பிணை ரூபா 25,000/-
இதற்கு மேலதிகமாகப் பிணை செலுத்த வேண்டிய அவசியம் ஏற்படின் சங்கத்தால் கேட்கப்படுமிடத்து அதை நிறைவேற்றுவதற்கு ஆயத்தமாக இருத்தல் வேண்டும்.

06. (1) சங்க எல்லைப் பரப்பில் வசிப்பவருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
(2) சங்கத்தில் ரூபா 10/- செலுத்தி பெற்றுக்கொண்ட விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பிக்க வேண்டும்.
(3) மேலதிக விவரங்களை சங்கப் பணிமனையில் அறிந்து கொள்ளலாம்.

07. விண்ணப்பங்கள் -
தலைவர்,
யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் - வரையறுள்ளது,
127, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட வேண்டும். விண்ணப்ப கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் 'பொது முகாமையாளர் பதவி' என எழுதப்பட வேண்டும்.

25.01.2002 (C/20447) தலைவர்.

# வங்கியாளர்களுக்கான பரீட்சை சர்வதேச தரத்துக்கு மறுசீரமைப்பு

## நிதிசார் துறையினர் பங்குபற்ற வாய்ப்பு

யாழ்ப்பாணம்,ஜன.25

இலங்கை வங்கியாளர் நிலையம் லண்டன் பட்டய வங்கியாளர் நிலையத்தின் அனுசரணையுடன் சர்வதேச தரத்தில் ஏற்றுக்கொள்ளக்கூடிய பரீட்சைகளை நடத்தவிருக்கின்றது.

வங்கியாளர்களுக்கு மட்டும் வரையறுக்கப்பட்டிருந்த பரீட்சைகள் சர்வதேச தரத்துக்கு மறுசீரமைக்கப்பட்டுள்ளன. இந்தப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கு இலங்கை வங்கியாளர் நிலையமும் லண்டன் வங்கியாளர் நிலையமும் இணைந்து சான்றிதழ்களை வழங்கவிருக்கின்றன.

வங்கியாளர்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்த இந்தப் பரீட்சை ஏனைய நிதிசார் துறையினருக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

இதனால் பாடசாலையை விட்டு விலகிய மாணவர்கள் மற்றும் வேலை வாய்ப்புத் தேடுபவர்களும் இந்தப் பரீட்சைக்குத் தோற்ற வாய்ப்புக் கிடைத்துள்ளது.

இந்தப் பரீட்சையில் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் தோற்றுவதற்கு பயிற்சிகளைப் பெறுவதற்கு நிலையம் ஒன்றை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (க-3)

### நல்லை ஆதீனத்தில் இன்று இடம்பெறும் நிகழ்வுகள்

நல்லை ஆதீனத்தின் புதிய கலாமண்டபத்தில் நடைபெற்று வரும் "முத்தமிழ்" நிகழ்வுகளில் ஏழாம் நாளான இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணிமுதல் மங்கள இசை, இசைக்கச்சேரி, வயலின் இசை என்பன இடம்பெறும்.

பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் சிரேஷ்ட விரிவுரையாளர் சிவத்தமிழ் வித்தகர் சிவ.மகாலிங்கம் இன்றைய நிகழ்வுகளுக்குத் தலைமை வகிப்பார். பிரம்மஸ்ரீ மனோகரக் குருக்கள் ஆசியுரை வழங்குவார்.

வி.கே.பஞ்சமூர்த்தி குழுவினர் மங்கள இசை இசைப்பர். செல்வி சுகன்யா சிவானந்தன் குழுவினரின் இசைக்கச்சேரியும்,லயஞானபூபதி ஆர்.இராதாகிருஷ்ணன் குழுவினரின் வயலின் இசையும் தொடர்ந்து இடம்பெறும். (க-7)

# அரவணைப்புடன் கூடிய கல்வியே கனிஷ்ட மாணவருக்கு உகந்தது

## நெடுந்தீவுப் பாடசாலை நிகழ்வில் உரை

யாழ்ப்பாணம்,ஜன.25

அரவணைப்புடன் கூடிய கல்வியே ஆரம்ப பாடசாலை மாணவருக்கு உகந்தது.

- இவ்வாறு தெரிவித்தார் நெடுந்தீவு ப.நோ.கூ.சங்கத்தின் பொது முகாமையாளர் இரா.தர்மலிங்கம்.

நெடுந்தீவு மேற்கு மங்கயர்க்கரசி வித்தியாலயத்தின் தரம் ஒன்று கால்கோள்விழா அண்மையில் வித்தியாலய அதிபர் கோ.பத்மநாதன் தலைமையில் நடைபெற்றது. இந்த விழாவில் பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

கல்வி மகத்தானது. மனிதனின் உள்ளத்தில் ஆழக்கிடக்கும் எண்ணங்களை - கருவூலங்களை வெளிக்கொண்டுவருவதே கல்வியின் நோக்கமாகும்.

ஆரம்பவகுப்புகளில் கல்வி கற்கும் மாணவர்கள் மத்தியில் இத்தகைய கருவூலங்கள் உருவாக வேண்டுமானால் அவர்கள் விருப்பத்துடன் கல்வி கற்கக் கூடிய வகையில் புறச்சூழல் உருவாக்கப்பட வேண்டும். பெற்றோரும், ஆசிரியர்களும் இந்த விடயத்தில் முன்னின்று செயற்பட வேண்டும்.

பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியல் தினந்தோறும் பெற்றோர் கவனம் செலுத்த வேண்டும். அதுமட்டுமன்றி அவர்களின் ஒவ்வொரு நடவடிக்கைகளிலும் கண்காணிப்பு அவசியமாகும்.

மாணவர்கள் மத்தியில் சுய அறிவு, சுய ஆற்றல் மேம்படும் வகையில் உரிய வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட வேண்டும். இதன்மூலமே எதிர்கால வாழ்வைப்பற்றிச் சிந்திக்கும் வல்லமை மிக்கவர்களாக அவர்கள் உருவாகிக்கொள்ள முடியும்.

கண்டிப்புடனான கல்வி இன்றைய மாணவர்களுக்கு அவசியம் எனப் பலரும் கூறுவர். ஆனால் அன்புடன் - அரவணைப்புடன் - வழங்கப்படும் கல்வியே சிறந்தது என கல்வியியல் சிந்தனையாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர் - என்றார் அவர்.

தரம் ஒன்று வகுப்பில் இணைந்து கொண்ட மாணவர்கள் சின்னம் சூட்டி, இனிப்புப் பண்டங்கள் வழங்கி வரவேற்கப்பட்டனர். பெற்றோர் சார்பில் இ.முத்துலிங்கம், பழைய மாணவர் சார்பில் ஐ.மயில்வாகனம் ஆகியோர் உரையாற்றினர். ஏற்புரையினை ஆசிரியை திருமதி வி.புவனேஸ்வரகுமார நிகழ்த்தினார். (க-7)

# பின்தங்கிய மாவட்டங்களுக்கே இம்முறை பட்டதாரி நியமனம்

திருகோணமலை,ஜன.25

வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சினால் அடுத்தமாதம் நியமனம் செய்யப்படவுள்ள ஆயிரம் பட்டதாரிப் பயிலுநர் ஆசிரியர்களும் பின்தங்கிய பகுதிகளிலுள்ள பாடசாலைகளுக்கே நியமனம் செய்யப்படவுள்ளனர் என மாகாணக் கல்வி அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

வடக்கு - கிழக்கில் பின்தங்கிய பகுதிகளில் உள்ள பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்திசெய்யும் வகையிலேயே இந்த நியமனங்கள் வழங்கப்படவுள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது. இதன்படி மட்டக்களப்புக்கு 155 ஆசிரியர்களும், முல்லைத்தீவுக்கு 154 ஆசிரியர்களும், அம்பாறைக்கு 153 பேரும், கிளிநொச்சிக்கு 130 பேரும், திருகோணமலைக்கு 124 பேரும், மன்னாருக்கு 118 பேரும், வவுனியாவுக்கு 86 பேரும், யாழ்ப்பாணத்துக்கு 80 பேரும் நியமனம் செய்யப்படவுள்ளனர்.

மேற்படி நேர்முகத் தேர்வுக்கு வடக்கு - கிழக்கில் இருந்து சுமார் மூவாயிரம் பட்டதாரிகள் தோற்றியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-7-4)

# பயன்மிகத் தந்திடும் பசு வளர்ப்பு வீடுகள் தோறும் பெருகிட வேண்டும்

உலகிலேயே, மிகவும் சாதுவான பிராணி பசு. அது பால் தரும். பாலிலிருந்து தயிர், மோர், வெண்ணெய், நெய் முதலாகிய சுவைமிக்க, ஊட்டச்சத்து நிறைந்த பதார்த்தங்கள் கிடைக்கின்றன.

ஒரு குழந்தை தன் தாய்ப்பாலை ஓரிரண்டு ஆண்டுகள்தான் பருகி வளர்கின்றது. பின்னர் சிறுவனாகி, இளைஞனாகி, சம்சாரியாகி, முதியவனாகி இறக்கும்வரை பசுவின் பாலையே பருகும்நிலை காணப்படுகிறது. இதன்மூலம தாயின் இடத்தைப் பசு எடுத்து, பசு தாயாகிவிடுகிறது.

பசு காளைகளை ஈன்று தருகிறது. அது கமக்காரனோடு சேர்ந்து வாழ்நாள் முழுவதும் உழைக்கிறது. வண்டி இழுக்கிறது. வயல் உழுகிறது. நீர் இறைக்கின்றது. சூடு மிதிக்கிறது. வயலுக்கு வேண்டிய பசளையையும் தருகிறது.

கமக்காரன் தன் தொழிலுக்கு வாய்ப்பாக உதவிய சூரியனுக்கு, நன்றிக் கடனாக பொங்கல் செய்து வணங்குகிறான். அடுத்த நாள் தன்னை வளர்த்த, தன்னோடு உழைத்த மாடுகளுக்காக ஒரு பொங்கல் செய்து அவைகளுக்கு ஊட்டி மகிழ்கிறான்.

### ஞானக்கதிர்

சூரியனோ, மாடுகளோ இந்த நன்றி வெளிப்பாட்டை உணர்வதில்லையாயினும், தான் அனுபவிக்கிறான். அப்பிராணிகள் வயது முதிர்வால் பயன் தராது விட்டாலும், அவை இறக்கும் வரை அவைகளைப் பரிவோடு காப்பாற்றுகிறான். அவை இறந்துவிட்டால் ஒரு மனிதருக்குச் செய்யும் மரியாதை செய்து, கண்ணீர் மல்க, அவைகளை அடக்கஞ் செய்து ஆன்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கிறான். இவ் அருங்காட்சியை சுமார் ஐம்பது வருடங்களுக்கு முன் பூநகரியில் கண்டு நான் வியந்தேன்.

பசு உண்பது புல் போன்ற தாவர உணவை. அதன் சாணம் தொற்று நோய் நீக்கியாக விசேட தன்மை பெற்றது. இந்த மாற்றம் பசுவின் வயிற்றுள் ஏற்படுவது ஒரு புதுமை. முன்னோர் சாணத்தால் வீடு மெழுகுவார்கள். அதைக் கரைத்து எல்லா இடங்களிலும் தெளிப்பார்கள். அக்காலத்தில் இப்போதுபோல இரசாயனத் தொற்று நீக்கிகள் இருக்கவில்லை.

இந்தியாவில் வரண்ட பகுதிகளில் விறகு கிடைப்பதில்லை. மக்கள் சாணத்தை விறாட்டியாக்கி நன்றாக வெய்யிலில் காயவைத்து சமையலுக்கு எரிபொருளாகப் பயன்படுத்துவர். மனிதர் இறந்துவிட்டாலும் இந்த



விறாட்டியைப் பயன்படுத்தி, ஊன் உடலை எரிப்பார்கள். விறாட்டி எரிவதால் புடஞ்செய்யப்பட்டு விடுகிறது.

சுடு காட்டுக்கு வருகை தரும் மக்களிடம் இறைஞானம் ஏற்படுவது வழமை. 'ஆகா' எத்தகைய பெரிய மனிதன்! வீடென்ன, வாசலென்ன, பெண்டீரென்ன, பிள்ளைகளென்ன; மாடென்ன, கன்றென்ன, தோட்டமென்ன, துரவென்ன. என்ன சிறப்போடு வாழ்ந்தான். நேற்றுக் காலை நன்றாகவே இருந்தான். சடுதியாக இடப்பக்கம் நொந்ததென்றான். இருந்தான், கிடந்தான், கேள் அலற இறந்தொழிந்தானே! என்ன வாழ்வு, எத்தனை சண்டைகள்; வழக்குகள். சூதுவாதுகள் வெறுங்கையோடு போய விட்டானே! இங்ஙனம் பேசுவார்கள். இதைச் சுடலைஞானமென்பர். வீட்டுக்குப் போனதும் 'விட்டேனா பாராடி' என்பான்." பழையபடி குரோதம், விரோதம், பொறாமை முதலாம் தீய குணங்கள் வந்துவிடும். ஆகாது, ஞானம் வீட்டிலும் இருக்க வேண்டுமென்பதற்காகவே நீறு பூசும் வழக்கம் ஏற்பட்டிருக்க வேண்டும். சாவை நினைக்கில் பாவமில்லை என்பர். நீற்றினை நெற்றியிலும், மார்பிலும் பூசும்போது இறைநாமத்தை உச்சரிப்பதால் வெறும் நீறு, திருநீறு என்கிற பெருமை பெற்றுவிடுகிறது. திருநறு மந்திரகாரியங்களுக்குப் பயன்படுகிறது. மருந்தாகவும் பயன்படுகிறது. மேனியின் அழகை மேம்படுத்துகிறது. "நீறில்லா நெற்றி பாழ். நெய்யில்லா உண்டி பாழ். ஆறில்லா ஊருக்கு அழகு பாழ்" என்பர். திருஞான சம்பந்தசுவாமிகள் திருநீற்றின் மகிமையை ஒரு பதிகமாகவே பாடியருளினார்.

சிவதீட்சை பெற்றவர்கள் திருநீற்றை மூன்று கோடுகளாக வரைவர். இக்கோடுகள் ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களையும் எரித்து விடவேண்டுமென நினைவூட்டும். அவ்வாறு அழித்து விடுவதென்பது இலகுவான காரியமல்ல. சில துறவிகள் தம் வைராக்கியத்தால் இதைச் சாதித்து உள்ளனர். அவர்கள் ஜீவன் முத்தர்கள். சிவமாகிவிட்டவர்கள் அவர்கள். இறந்த பின் சமாதி வைத்து சிவலிங்க பூசை செய்கிற வழக்கமுண்டு.

சுடலையில் சிறிது நேரமாவது ஞானம் உண்டாவதால் அங்கு இறைவன் நடனமாடுகிறான் என்று சொல்வார்கள். இறை சக்தி பிரபஞ்சம் முழுவதும் பரந்து இருக்கிறது. அங்கு இங்கு என்றில்லை.

பசுக்களைக் கூட்டங்கூட்டமாக மிகப் பழைய காலந்தொட்டே மக்கள் வளர்த்து வந்துள்ளார்கள். பசுக்களைச் செல்வமாகக் கருதுவர். ஆநிரை கவர்தல் இரு அரசுகளுக்கிடையில் போர் உண்டாகக் காரணமாகிவிடுகிறது.

குழந்தை யேசு பிறந்தது மாட்டுத் தொழுவத்தில். பிறந்த காலமோ கடும் குளிர்காலம். சிறு தொட்டிலிலே, வைக்கோல் பரப்பி, பசுக்கள் சுற்றி நின்று உஷ்ணக் காற்றைப் பரப்ப, பாலன் கால்கைகளை உயர்த்தி அசைத்து விளையாடும் அருங்காட்சியை கிறிஸ்மஸ் காலங்களில் கிறீஸ்தவ சகோதரரின் வீடுகளில் பார்த்து மகிழலாம்.

மு.கனகசபை
கொழும்புத்துறை

கங்கை ஆற்றினை கங்கா மாதா என்றும், காவிரியை காவிரித் தாய் என்றும், அன்னையையும் தந்தையையும் முன்னறி தெய்வங்கள் என்றும் போற்றுகிற மரபு இந்திய மரபு; தமிழர் மரபு.

**எம்மை சத்துமிக்க பால் போன்ற உணவு வகைகளைத் தந்து, பரிவோடு உதவி வளர்க்கின்ற பசுக்களை "கோமாதா", "குலமாதா" என்று போற்றுவதும் எமது மரபாகும். எல்லாமே மன உணர்வின் வெளிப்பாடுகளே. அது மனப் பதிவெனப்படும். பசுக்களை வளர்த்து எங்களை வளர்ப்போமாக.**

# வடக்கு - கிழக்கில் மூடப்பட்டுள்ள கூ. மொ. வி. நிலையங்களை மீள இயக்க நடவடிக்கை

## அமைச்சர் ரவி கருணாநாயக்க தகவல்

வடக்கு - கிழக்கில் ஊழியர் பற்றாக்குறை காரணமாக மூடப்பட்டுள்ள கூட்டுறவு மொத்த விற்பனை நிலையங்களை மீள இயக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

மேற்படி விற்பனை நிலையங்களுக்குப் புதியவர்களை ஆள்சேர்ப்பது குறித்து தமிழ்க்கட்சிக் கூட்டமைப்புடன் விரைவில் பேச்சுக்கள் நடத்தப்படும்.

- இவ்வாறு தெரிவித்துள்ளார் பாவனையாளர், வர்த்தக விவகார அமைச்சர் ரவி கருணாநாயக்க.

கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் மாநாடு ஒன்றிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அமைச்சர் இது குறித்து மேலும் தெரிவித்ததாவது:-

கூட்டுறவு மொத்த விற்பனவு நிறுவனத்தின் முகாமைத்துவம் தனியார்மயப்படுத்தப்படும். பற்றாக்குறை, ஊழல் என்பவற்றை நீக்குவதும், நிறுவனத்தினை லாபம்மிக்க ஒன்றாக மாற்றுவதும் இதன் நோக்கமாகும்.

கூட்டுறவு மொத்த விற்பனவு நிறுவனம் இந்த நடவடிக்கையின்மூலம் தனியார் மயப்படுத்தப்படமாட்டாது. அதன் வளங்கள் தனியார் துறையிடம் கையளிக்கப்படமாட்டாது என்று அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ம-7-4-ரி)

### ஒன்றிப்பு வழிபாடு

யாழ்ப்பாணம்,ஜன.25

யாழ். கிறிஸ்தவ ஒன்றியம் நடத்தும் ஒன்றிப்பு வழிபாடு இன்று வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரியில் பீற்றோ மண்டபத்தில் நடைபெறவிருக்கின்றது. (க-4)

# திருமறைக் கலாமன்றத்தின் தமிழ் விழா வவுனியாவில்!

யாழ்ப்பாணம்,ஜன.25

வவுனியா திருமறைக் கலாமன்றத்தின் ஏற்பாட்டில் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயத்தில் தமிழ்விழா நடைபெறவுள்ளது.

இந்தத் தமிழ் விழாவில் பரத நாட்டிய அரங்கேற்றமும், நாடகமும் மேடையேற்றப்படவுள்ளன. தமிழ் விழாவில் வவுனியா அரச அதிபர் உட்பட மதத் தலைவர்கள் பலரும் சிறப்புரையாற்றவுள்ளனர்.

வவுனியா திருமறைக் கலாமன்றத்தால் தமிழ் விழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்குச் சான்றிதழ்களும் வழங்கப்படும். (க-6)

### குடாநாட்டுக்கான 208 தபாற் பொதிகள் எடுத்துவரப்பட்டன

யாழ்ப்பாணம்,ஜன.25

காங்கேசன்துறைத் துறைமுகத்திற்கு நேற்று வந்துசேர்ந்த செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுக் கப்பலில் குடாநாட்டுக்கான வெளியூர்த் தபால்கள் அடங்கிய 208 தபாற் பொதிகள் எடுத்துவரப்பட்டுள்ளன.

இதே கப்பலில் குடாநாட்டில் சேகரிக்கப்பட்ட வெளியூர்த் தபால்கள் அடங்கிய 51 தபாற் பொதிகள் திருகோணமலைக்கு அனுப்பிவைக்கப்பட்டிருப்பதாக யாழ்.பிரதம தபாலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை -

திருகோணமலை தபாலகத்தில் சுமார் நானூறுக்கும் மேற்பட்ட தபாற் பொதிகள் குடாநாட்டுக்கு எடுத்துவர முடியாமல் தேங்கிக் கிடப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ம-6)

### தோமஸ் அடிகளாரின் நினைவு தினம்

யாழ்ப்பாணம்,ஜன.25

செபமாலைத் தாசர் சபையின் நிறுவுனரான தவத்திரு. தோமஸ் அடிகளாரின் 38ஆவது நினைவு தினம் நாளை சனிக்கிழமை பாண்டியன்தாழ்வு தவத்திரு. தோமஸ் அடிகள் இளைஞர் மன்றத்தால் நினைவு கூரப்படுகிறது.

தோமஸ் அடிகள் பிறந்த ஊரான பாண்டியன்தாழ்வில் அவரது நினைவு தினத்தன்று விசேட நிகழ்வுகளை நடத்த இளைஞர் மன்றம் ஏற்பாடு செய்துவருகிறது.

தோமஸ் அடிகளாரை புனிதர் நிலைக்கு உயர்த்துவதற்கான முன்முயற்சிகளில் கத்தோலிக்க திருச்சபை ஈடுபட்டுவருவதும் குறிப்பிடத்தக்கதாகும். (க-6)

# முதலாம் ஆண்டு நினைவலைகள்

அன்னை மடியில் 14 - 07 - 1928



அம்பிகை அடியில் 04 - 02 - 2001

## அமரர் நாகன் கதிரவேலு

(விசுவப்பா)

திதி:25.01.2002


*ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.*

*C.P.M. லேன், நவாலி தெற்கு, மானிப்பாய்.* (C-20450)

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

# 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 12 ◊ 04 ◊ 1948



உதிர்வு 25 ◊ 01 ◊ 1997

## அமரர் த.கதிர்காமநாதன் (தறுமு)

*(சாந்தி ரான்ஸ்போட் உரிமையாளர்)*

*அன்புத் தந்தையே! எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்கே!*
*அன்போடு பழகிய அப்பாவே! எம்மை விட்டுப் பிரிந்து*
*ஆண்டுகள் ஐந்து ஆகிவிட்டனவே! நீங்கள்*
*மறைந்தாலும் உங்கள் நினைவுகள் எங்கள்*
*நெஞ்சங்களை விட்டு ஒருபோதும் மறையாது*

*ஆத்மா சாந்தி அடைவதாக.*

*S.பன்னீர், வேலகாடு, ஊரிக்காடு, வல்வெட்டித்துறை.* (97405)

- மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 14 - 01 - 1917



இறப்பு 05 - 02 - 2001

அமரர்

## செல்லையா இராசதுரை

*(இளைப்பாறிய ஆங்கில ஆசிரியர் - யா/நடேஸ்வராக் கல்லூரி)*

ஆண்டு ஒன்று சென்றாலும்
உங்கள் அன்பு முகத்தை
எங்களால் மறக்க முடியவில்லையே!
*உங்கள் ஆத்மா சாந்தி அடைவதாக.*

*அன்புடன் நினைவு கூரும்:*
மனைவி பரிபூரணமும்,
குடும்பத்தினரும்.

*"வத்தனை வளவு" உடுவில் கிழக்கு, சுன்னாகம்.* (97420)

## கலைஞானி நினைவாக பிரார்த்தனை

யாழ்ப்பாணம்,ஜன.25

மாமனிதர் கலைஞானி அ.செல்வரத்தினம் ஞாபகார்த்த முதலாம் மாத நினைவுப் பிரார்த்தனை நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் தொண்டமனாறு செல்வச்சந்நிதி ஆச்சிரமத்தில் நடைபெறவுள்ளது.

பிரார்த்தனையைத் தொடர்ந்து மாகேசுவர பூசையும் இடம்பெறவுள்ளது. (க-9)

## செயலமர்வு

'யுனிசெவ்' நிறுவன அனுசரணையுடன் தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 6இல் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான மொழித்திறன் விருத்திச் செயற்றிட்ட செயலமர்வு நாளை காலை 8.30 மணிக்கு நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெறும்.

இந்த செயற்றிட்ட செயலமர்வுக்குத் தெரிவுசெய்யப்பட்ட பாடசாலைகளின் ஆசிரியர்களைத் தவறாது கலந்துகொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார். (ம-117)

## தென்மராட்சி வலயப் பணிமனையின் கிளை கொடிகாமத்தில்

சாவகச்சேரி,ஜன.25

தென்மராட்சி வலயக் கல்விப் பணிமனையின் கிளை அலுவலகம் நேற்று முன்தினம் காலை கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயத்தில் - தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசாவால் சம்பிரதாயபூர்வமாகத் திறந்துவைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் அதிபர்கள், ஆசிரியர்கள், கல்வி அதிகாரிகள் கலந்துகொண்டனர். (ம-51)

## உலக வங்கியின் பிரதிநிதிகள் குழு இலங்கை வருகிறது

கொழும்பு,ஜன.25

உலக வங்கிப் பிரதிநிதிகள் குழு ஒன்று பெப்ரவரி முதல் வாரத்தில் இலங்கைக்கு வரவிருக்கிறது. புதிய அரசின் பொருளாதார நடவடிக்கைகள் குறித்து அக்குழு ஆராயும். பிரதி நிதியமைச்சர் பந்துல குணவர்த்தன இத்தகவலைத் தெரிவித்தார். (க)

## மட்டு வைத்தியசாலையில் 2,606 நோயாளர்கள் இறப்பு

காத்தான்குடி,ஜன.25

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் கடந்த மூன்று ஆண்டுகளில் சேர்க்கப்பட்டவர்களில் 2,606 பேர் இறந்துள்ளனர் என்று வைத்தியசாலையின் வருடாந்த புள்ளிவிவர அறிக்கை தெரிவிக்கின்றது.

1999ஆம் ஆண்டு 811 பேரும், 2000ஆம் ஆண்டு 885 பேரும், 2001ஆம் ஆண்டு 910 பேரும் இறந்துள்ளனர் என்று அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.

இக்காலப் பகுதிகளில் 1,24,633 நோயாளர்கள் சிகிச்சைக்கென விடுதிகளில் சேர்க்கப்பட்டனர். (க)

# முதலாம் ஆண்டு நினைவலைகள்

*மண்ணகம் 06 - 08 - 1936*



*விண்ணகம் 04 - 02 - 2001*

## பொன்னையா சிவபாதம்

*(கட்டடக் கலைஞர், மணல்பகுதி, புத்தூர்)*

எங்கள் இதயத் தெய்வமே! நீங்கள்
எம்மை விட்டுப் பிரிந்தாலும் உங்கள்
நினைவுகள் என்றும் எம்மை விட்டகலாது.

*உங்கள் நினைவில் வாழும் பிள்ளைகள்:*
*சி.மகேந்திரன் (சுவிஸ்),*
*சி.அசோகன் (சுவிஸ்),*
*சகோதரி: சி.சிவபதியம்மா.*

*"பொன் அருவி" வதிரி.*

*தகவல்: டி.எம்.வேதாபரணம்(G.S)*

(C/20431)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

செகதலத்தில் 26 - 02 - 1912



சிவன்பதத்தில் 05 - 02 - 2001

அமரர்

## த.ஆ.சங்கரப்பிள்ளை

*(இளைப்பாறிய ஆங்கில ஆசிரியர்)*

ஆங்கிலமும் கணிதமும் ஆவலொடு அமிர்தமென
நீங்கள் எமக்கு நித்தம் நித்தம் ஊட்டியதால்
தாங்கிய தொழிற்றுறையில் நாம் தழைத்தோம்
தூங்கும் ஐயா பரவசமாய் பரமசிவன் திருவடியில்
தேங்கிய பாசமொடு துதிக்கின்றோம் நின் ஆத்ம சாந்திக்காக

பிரியமிகு புதல்வர்கள்:
சந்தானம் குடும்பம்
விமலகாந்தன்
ஆசைமகள்: நகநந்தினி.

*பத்தாவத்தை, பிரதான வீதி, இளவாலை.* (97375)

உ
சிவமயம்

**26.01.1953இல் இல்லற வாழ்வில் இனிதே இணைந்தவர்களான**

## திரு.திருமதி வயிரமுத்து - பவளம் தம்பதிகளின்

# பொன்விழா அழைப்பு



நாளை (26.01.2002) சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும் பொன்விழாவுக்கு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் குடும்ப சமேதராக வருகை தந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம். பொன்விழாக் காணும் தம்பதிகள் எல்லாம்வல்ல வல்லிபுரநாதர் கிருபையால் நீடூழி காலம் சுகமாக வாழ்கவென அன்புடன் உளமார வாழ்த்துகின்றோம்.

| பிள்ளைகள் | மருமக்கள் | பேரப்பிள்ளைகள் |
|---|---|---|
| வ.சந்திரசேகரம் | றஞ்சிதாதேவி | ரீபசேகரம், நிறஞ்சினி |
| வ.குணநாயகம் | சுகேஸ்வரி | துவாரகா, கௌசிகன் |
| வ.வேதநாயகம் | திலகேஸ்வரி | திரியம்பகி, சஞ்ஜீவன், றசீவன் |
| வே.சுகுணாவதி | வ.வேலாயுதம் | சுகுர்ந்தினி, ஜலக்ன் |
| வ.புனிதநாயகம் | சசிகலா | இலக்கியா, இலகியா |
| வ.மோகன் | உமா | |
| சே.நந்தினி | தெ.சேகர் | சகிலா, மிலாலினி |

"சுகுண பவனம்" கோண்டாவில் வடக்கு.

*இந்த அழைப்பையே தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.*

(97332)

## புலிகள் போர்க்கைதிகளை விடுவித்ததற்குப் பதிலாக

# நல்லெண்ண நடவடிக்கையாக அரசாங்கமும்

# தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்கவேண்டும்

## தமிழ்க் காங்கிரஸ் மாவட்டக் கூட்டத்தில் தீர்மானம்

யாழ்ப்பாணம்,ஜன.25

விடுதலைப் புலிகள் யுத்தக் கைதிகள் சிலரை விடுவித்ததற்குப் பதிலான ஒரு நல்லெண்ண நடவடிக்கையாக யாழ்.பல்கலைக்கழக மாணவன் திவ்வியன் உள்ளிட்ட, தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்ய அரசு உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும்.

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸின் யாழ்.மாவட்டத் தொகுதிக் கிளைகளின் தலைவர்கள், செயலாளர்கள் ஒன்றுகூடி இவ்வாறு கோரும் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியுள்ளனர்.

கடந்த 22ஆம் திகதி யாழ். மாவட்டக் கிளையின் உப தலைவர் தி.மகேந்திரராசா தலைமையில் நடைபெற்ற கூட்டத்திலேயே இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட ஏனைய தீர்மானங்கள் வருமாறு:-

☆ யாழ்.குடாநாட்டில் புதிய அரசு பதவியேற்ற கையோடு விலைவாசிகள் திடீரென உயர்த்தப்பட்டதைக் கண்டிக்கின்றோம். அரிசி, மா, பாண், சீனி, மண்ணெண்ணெய், உருளைக்கிழங்கு, தேங்காய், பால்மா போன்ற உணவுப் பொருள்களின் விலைகள் உடனடியாகக் குறைக்கப்படவேண்டும். அத்துடன் விலைக்கட்டுப்பாட்டு முறை நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும்.

☆ சமாதானச் சூழ்நிலை நிலவுவதால் மக்களுக்குச் சொந்தமான வீடுகளிலும், கடைக் கட்டடங்களிலும், கோயில்களிலும், பாடசாலைகளிலும், தோட்டக்காணிகளிலும் உள்ள படையினர் வெளியேற்றப்படுவதோடு, மக்களுக்கு உரிய நஷ்டஈடும் வழங்கப்படல் வேண்டும்.

☆ கடற்றொழிலாளர்கள் சுதந்திரமாகத் தொழில்செய்ய அனுமதிக்கப்படுவதோடு தொழில் செய்ய இடைஞ்சலாக இருக்கும் தூரக் கட்டுப்பாடு, நேரக் கட்டுப்பாடு ஆகியவற்றை நீக்கப் புதிய அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

☆ தடைமுகாம்களில் குறிப்பாக வடமராட்சிப் பகுதியில் நெல், வைக்கோல் முதலியவற்றைப் படையினர் பல இடங்களில் வைத்து இறக்கச் செய்வதால் விவசாயிகள் பல கஷ்டங்களை அனுபவிக்கின்றார்கள். இதனை நீக்க அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

☆ விடுதலைப் புலிகளுக்கும் ஸ்ரீலங்கா அரசுக்கும் நேரடிப் பேச்சுக்கள் கூடிய விரைவில் ஆரம்பிக்கப்படக்கூடிய சாத்தியக்கூறுகள் தென்படுவதால், பேச்சுக்காலத்தில் தேர்தல்கள் நடைபெறுவது விரும்பத்தக்கதல்ல என்பதாலும், உள்ளூராட்சிமன்றத் தேர்தல்களை ஆகக் குறைந்தது ஆறு மாதங்களுக்காவது ஒத்திவைக்கவேண்டும்.

☆ உள்ளூராட்சித் தேர்தல் சட்டம் திருத்தப்படும்போது, வாக்காளர்கள் அடையாள அட்டையைக் காண்பித்து வாக்களிப்பது கட்டாயமாக்கப்படல் வேண்டும் என்பதை தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பு நாடாளுமன்றத்திலும் வெளியிலும் வலியுறுத்தவேண்டும்.

☆ பிரதேச செயலக பிரிவுகளாக இருந்தும் பிரதேச சபைகள் உருவாக்கப்படாதுள்ள மருதங்கேணி, ஈச்சிலம்பத்தை போன்ற பகுதிகளுக்கு உடனடியாகப் பிரதேச சபைகள் உருவாக்கப்படல்வேண்டும். மாவட்ட நகரான மன்னார் நகரம் நகரசபை அந்தஸ்துக்கு உயர்த்தப்பட வேண்டும்.

☆ உள்ளூராட்சி மன்றத்துக்கு எப்பொழுது தேர்தல் நடந்தாலும் அந்தந்த உள்ளூராட்சி மன்ற எல்லைக்குள் நிரந்தர வசிப்பாளராகவும், வாக்காளராகவும் உள்ளவரையே கட்சிகள் வேட்பாளர்களாக நிறுத்த வேண்டும்.

☆ அதிகரித்துவரும் அத்தியாவசியப் பொருள்களின் விலைகளைக் கட்டுப்படுத்தவும், பொதுமக்கள் எதிர்கொள்ளும் போக்குவரத்துப் பிரச்சினைகளுக்கு ஓரளவு தீர்வு காண்பதற்குமாக யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கான தரை வழிப்பாதையை அரசு உடனடியாகத் திறக்கவேண்டும் அரசுத்தரப்பு இவ்விடயத்தில் போதிய சிரத்தை எடுக்கவேண்டும்.

அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் யாழ்.குடாநாட்டு நடவடிக்கைகள், பத்திரிகைத் தொடர்புகள் யாவும் கட்சியின் யாழ். தலைமையத்தினால் மட்டுமே மேற்கொள்ளப்படும்.

தமிழ்க் கட்சிகள் கூட்டமைப்பின் நடவடிக்கைகள் மாவட்டங்களுக்கு பரவலாக்கப்படல் வேண்டும். அதற்கேற்ப ஒவ்வொரு மாவட்டத்திலும் இக்கட்சிகளின் பிரதிநிதிகளை உள்ளடக்கிய செயற் குழுக்கள் உடனடியாக உருவாக்கப்படவேண்டும்.

- ஆகிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

(ம-7)

## கைதடிப் பகுதி விவசாயிகளுக்கு கடன் உதவி

யாழ்ப்பாணம்,ஜன.25

கைதடிப் பகுதி விவசாயிகளுக்கு, சுழற்சி முறையில் கடன் வழங்குவதற்காக ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் (U.N.D.P.) 2 லட்சம் ரூபா நிதி வழங்கப்பட்டுள்ளது.

யுத்த நடவடிக்கையால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் மீண்டும் விவசாயம் செய்வதற்கு இந்த நிதி சுழற்சி முறையில் வழங்கப்படும் என்று தென்மராட்சி மேற்கு ப.நோ.கூ. சங்கத்தின் தலைவர் தெரிவித்தார். (க-6)

## மனித உரிமை ஆணைக்குழு அலுவலகத்தில் நேர்முகப் பரீட்சை

யாழ்ப்பாணம் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அலுவலர்களைத் தெரிவுசெய்வதற்கான நேர்முகப் பரீட்சை நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணம் வரும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவர் பாயிஸ் முஸ்தபாவும் மற்றும் சில அதிகாரிகளும் இந்த நேர்முகப் பரீட்சையை நடத்துவர்.

இந்த அலுவலர்களுக்கான பதவிக்கு விண்ணப்பங்களை அனுப்பி வைத்தவர்கள் இந்த நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றமுடியும் என்று மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலக இணைப்பாளர் என்.ஜீவேஸ்வரா தெரிவித்தார்.

(க-4-ரி)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஜன.25

அகில இலங்கை சைவப் புலவர் சங்கத்தினால் எதிர்வரும் ஏப்ரல் மாதம் நடத்தப்படவுள்ள சைவப் புலவர் பட்டப் பரீட்சைக்கு விண்ணப்பித்தவர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று நாளை சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு வண்ணை நாவலர் மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இளஞ் சைவப்புலவர், சைவப் புலவர் ஆகிய பட்டப் பரீட்சைக்கு விண்ணப்பித்தவர்கள் இந்தக் கலந்துரையாடலுக்குத் தவறாது சமுகமளிக்கவேண்டுமென சைவப்புலவர் சங்கச் செயலாளர் கேட்டுள்ளார்.

(க-7-180)

## இளவாலைப் பகுதியில் மீண்டும் திருடர் தொல்லை அதிகரிப்பு

யாழ்ப்பாணம்,ஜன.25

இளவாலைப் பகுதியில் திருடர்களின் தொல்லை மீண்டும் தலைதூக்கியுள்ளது.

குடியிருப்புக்களை நாட அஞ்சும் இத்திருடர்கள் அப்பகுதிகளிலுள்ள ஆள்கள் அற்ற வீடுகளில் இருந்து பொருள்களை சூறையாடும வேலையில் இப்போது ஈடுபட்டுவருகின்றனர்.

இந்தச் சமூக விரோதிகள் வீடுகளின் கதவு, ஜன்னல், நிலைகள் உட்பட வீட்டின் கூரை ஓடுகள், 'சீற்'கள் என்பனவற்றையும் கழற்றி அப்கரிக்கும் திருட்டு முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

இது குறித்து முறைப்பாடுகள் தெரிவிக்கப்பட்டும் சம்பந்தப்பட்டவர்கள் எதுவித நடவடிக்கையையும் எடுக்கவில்லை என்று மக்கள் குறைப்பட்டுக்கொண்டனர். (க-15)

## கசிப்பு விற்ற 7 பேருக்கு 16 ஆயிரம் ரூபா அபராதம்

யாழ்ப்பாணம்,ஜன.25

கசிப்பு உற்பத்தி மற்றும் விற்பனையில் ஈடுபட்ட 7 பேரைக் கடந்த இரு தினங்களில் கைதுசெய்த பொலீஸார் யாழ்.நீதிவான் நீதிமன்றில், நீதிவான் திருமதி எஸ்.இளங்கோவன் முன்னிலையில் ஆஜர் செய்தனர். இவர்களுக்கு 15 ஆயிரத்து 750 ரூபா குற்றப்பணம் விதிக்கப்பட்டது.

கோப்பாய்ப் பொலீஸாரால் கைது செய்யப்பட்ட ஜெயராசா நகுலினிக்கு (ராமலிங்கம் வீதி, திருநெல்வேலி) 5 ஆயிரம் ரூபாவும், தம்பிஐயா ரவிந்தாஸுக்கு (திருநெல்வேலி) 2 ஆயிரம் ரூபாவும், வைரவன் செல்லையாவுக்கு (கோயில் வீதி, நல்லூர்), ஆயிரம் ரூபாவும், விநாயகமூர்த்தி பாக்கியநாதனுக்கு (கல்வியங்காடு) 5 ஆயிரம் ரூபாவும், நடராஜாவுக்கு (உரும்பிராய் மேற்கு) 500 ரூபாவும் -

யாழ்.பொலீஸாரால் ஆஜர் செய்யப்பட்ட கணேசையா சந்திரேஸ்வரனுக்கு (அரசடி, நல்லூர்) ஆயிரத்து 500 ரூபாவும், அந்தோனிப்பிள்ளை ரவீந்திரனுக்கு (வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம்) 750 ரூபாவும் தண்டம் விதிக்கப்பட்டது.

(க-6)



புன்னாலைக்கட்டுவன் அ.த.க. பாடசாலையில் அண்மையில் வழிபாட்டுபீடம் ஒன்று புதிதாக அமைக்கப்பட்டது. இது குறித்து ஏற்பாடுசெய்யப்பட்டிருந்த வழிபாட்டு நிகழ்வில் பிரம்ஸ்ரீ எஸ்.கோபாலகிருஷ்ணசர்மா விசேடபூசை நிகழ்த்துவதைப் படத்தில் காணலாம். அருகில் பாடசாலை அதிபர் சி.மணியம் மற்றும் மாணவர்கள் காணப்படுகின்றனர். (க-7-133)

## காணாமற்போனவர் வீடு திரும்பினார்

யாழ்ப்பாணம்,ஜன.25

கடந்த நான்காம் திகதி காணாமற் போன சித்தசுவாதீனமற்ற நபர் உறவினர்களால் கண்டு பிடிக்கப்பட்டு வீட்டுக்கு கூட்டி வரப்பட்டிருக்கிறார்.

சுழிபுரம் கிழக்கு செருக்கப்புலம் என்ற இடத்தைச் சேர்ந்த கண்ணுத்துரை மகேந்திரம் (வயது 54) என்பவரே முன்னர் காணாமற்போய் இருந்தார்.

இவர் காணாமற்போன சம்பவம் தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(க-4-ரி)

## புலோலி ஆத்தியடிப் பகுதியில் ரேவடி ஆஸ்பத்திரி நிர்மாணம்

### கட்டட வேலைகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஜன.25

பருத்தித்துறை மத்திய மருந்தகம் - ரேவடி ஆஸ்பத்திரி - புதிதாக நிர்மாணிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

ஆரம்ப காலத்தில் இருந்து துறைமுகப் பகுதியில் இயங்கிவந்த இம் மருந்தகம், கடந்தகால இராணுவ நடவடிக்கைகள் காரணமாக அங்கு இயங்கமுடியாத நிலையில், ஆத்தியடிப் பகுதியில் தனியார் கட்டடம் ஒன்றில் செயற்பட்டு வந்தது. கடந்த 20 வருடங்களுக்கு மேலாக தனியார் கட்டடத்தில் இயங்கிவந்த இம் மருந்தகத்தை நிலையான ஒரு கட்டடத்தில் இயங்கவைக்க, யாழ்மாவட்ட சுகாதார சேவைகள் பிரிவு நடவடிக்கை எடுத்திருந்தது. அதற்கு ஊர்மக்கள் முழு ஒத்துழைப்பு வழங்கியிருந்தனர். அதையடுத்து புலோலி மேற்கு ஆத்தியடிப் பகுதியில் இதற்கென வழங்கப்பட்ட ஒரு காணியிலேயே தற்போது இம்மருந்தகத்துக்கான கட்டடம் நிர்மாணிக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஆத்தியடிப் பிள்ளையார் கோயிலுக்குரிய இக்காணியை ஆலய நிர்வாகம் மனமுவந்து அளித்ததையடுத்து ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்நிர்மாண வேலைகளில் முதற்கட்டமாக அத்திவாரம் அமைக்கும் பணி துரிதகதியில் நடைபெற்றுவருகிறது. (க-15)

## முதியோருக்கு விசேட அடையாள அட்டை


வலிகாமம் தெற்கு,ஜன.25

வலிகாமம் வடக்கு - தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவில் வயது முதிர்ந்தவர்களுக்கான விசேட அடையாள அட்டைகள் வழங்க செயலகத்தினரால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

இத்திட்டத்தின்கீழ் 65 வயதுக்கு மேற்பட்ட முதியவர்கள் தத்தம் பகுதிக் கிராமசேவையாளர்கள் ஊடாக விண்ணப்பங்களைப் பிரதேச செயலகத்துக்கு அனுப்பிவைக்க வேண்டும்.

வயதுமுதிர்ந்தோருக்கான இவ் விசேட அடையாள அட்டைகளைப் பெறுவதன்மூலம் முதியவர்கள் வைத்தியசேவை, வங்கிச்சேவை, தபால் சேவை, போக்குவரத்துச் சேவை போன்ற பல துறைகளில் முன்னுரிமைகள், சலுகைகள் என்பவற்றை பெற்றுக்கொள்ளமுடியும்.

(க-15)




சங்கானைக் கல்விக் கோட்டம் ஏற்பாடுசெய்த சைவத்திருமுறை விழா அண்மையில் வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியில் நடைபெற்றது.

விழாவின் இறுதியில் சங்கானைக் கல்விக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.செல்லையா, வலிகாமம் கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் க.சுந்தரலிங்கம் மற்றும் விழாக்குழுவினர் இணைந்து எடுத்துக்கொண்ட படம் இது. (க-7)

## யாழ். உயர் தொழில்நுட்ப நிறுவனத்திற்கு

# புதிய மாணவர்களைத் தெரிவுசெய்ய மாத இறுதியில் நேர்முகப் பரீட்சைகள்

யாழ்ப்பாணம்,ஜன.25

யாழ்.உயர் தொழில்நுட்ப நிறுவனத்திற்குப் புதிய கல்வியாண்டிற்கு மாணவர்களைத் தெரிவுசெய்வதற்கான நேர்முகப் பரீட்சைகள் எதிர்வரும் 29ஆம் திகதி தொடக்கம் முதலாம் திகதிவரை உயர் தொழில்நுட்ப நிறுவனத்தில் நடைபெறவுள்ளன.

எதிர்வரும் 29ஆம், 30ஆம் திகதிகளில் எச்.என்.டி.ஏ.கற்கை நெறிக்கு விண்ணப்பித்த மாணவர்களுக்கும் -

எதிர்வரும் 31ஆம், முதலாந் திகதிகளில் எச்.என்.டி.எம்., என்.டி.ஈ., என்.டி.பி.எம்., என்.டி.பி.எஸ். ஆகிய கற்கைநெறிகளுக்கு விண்ணப்பித்த மாணவர்களுக்கும் நேர்முகப் பரீட்சைகள் நடைபெறும்.

புதிய கல்வியாண்டில் உயர் தொழில்நுட்ப நிறுவனத்தில் கற்கை நெறிகளைத் தொடர்வதற்குச் சுமார் ஆயிரம் மாணவர்கள் விண்ணப்பித்துள்ளனர் என்றும் -

அவர்களுக்கான நேர்முகப் பரீட்சைக் கடிதங்கள் தபால்மூலம் அனுப்பிவைக்கப்படும் எனவும் - உயர் தொழில்நுட்ப நிறுவன இயக்குநர் ரி.இராஜரட்ணம் தெரிவித்தார்.(க-6)

## கலைப்பீட மாணவர்களுக்கு!

அனைத்து கலைப்பீட மாணவர்களுக்கும் எதிர்வரும் (30.01.2002) புதன்கிழமைவரை பிற்பகல் 2.00 மணிக்குப் பின்னர் 2 லீற்றர் வீதம் மண்எண்ணெய் விநியோகம் செய்யப்படும். கலைப்பீட மாணவர் ஒன்றிய அலுவலகத்துடன் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளவும்.

கலைப்பீட மாணவர் ஒன்றியம்,
யாழ். பல்கலைக்கழகம்.
(97512)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



வேலணையைச் சேர்ந்த
முன்னாள் அதிபரும்,
சமய, சமூகத் தொண்டருமான
**திரு.பொன்னையா நடராசா**
அவர்கள் யாழ்.மாவட்ட சமாதான நீதிவான் பட்டம் பெற்றதையிட்டு எமது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

*132/1, கச்சேரி - நல்லூர் றோட், யாழ்ப்பாணம்.* (97508)
அ.குமாரவேலு குடும்பம் *(முன்னாள் அதிபர்)*

உ

கைதடி கயற்றசிட்டி கந்தசுவாமி தேவஸ்தானம்
## அந்தலீவ பிரதிஷ்டா கும்பாபிஷேக விஞ்ஞாபனம்



நிகழும் விஷு வருடம் தைமாதம் 15ஆம் நாள் (28.01.2002) தைப்பூசத்தினமாகிய திங்கட் கிழமை காலை 8.00 மணிக்கு 1008 சங்கு கொண்ட விஷேட அபிஷேக பூஜை நடை பெற்று, அதனைத் தொடர்ந்து முருகப்பெரு மான் திரு வீதியுலா வரும் அலங்காரக் காட்சி யும் நடைபெறும். அன்று தொடக்கம் தினமும் மூன்று கால பூஜைநடைபெறும் என்பதையும் அடியார் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

*கைதடி வடக்கு, கைதடி.* (97514) - ஆலய பரிபாலனசபை.

### அளவெட்டி கும்பளாவளை விநாயகர் (01.02.2002)
## மகா கும்பாபிஷேகம்



கும்பளாவளை அமரும் கொம்பன்
குறைவிலாது அரசு ஓச்சும்
நம்தமிழ் ஈழ மண்ணில்
நலம் திகழ் அளவையூரில்
செம்மையாய் கலைகள் ஓங்க
சிறப்புற சைவம் வாழும்
அம்மையும் அப்பனும் வியக்க
அவிணர்கள் தொழுது நிற்க
உம்பரும் பிறரும் போற்ற
உறைவது கும்பளாவளையே
செம்மை சேர் கயிலைபோல்
சிறந்தொளி வீசும் கோயில்
கும்பாபிஷேகம் காண நீவீர்
கூடியே வாரீர் ஒன்றாய்.

*விளம்பர அன்பளிப்பு:* **நந்தலாலா இரும்பகம்,** *29, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.*
*ஆக்கம்: அளவையூர் விகடகவி*
(C/20455)

## 10ஆவது ஆண்டு சிராத்ததின அஞ்சலி

25-01-2002



| | |
|---|---|
| உடம்பு எடுத்தது | உடம்பை நீத்தது |
| 04 - 05 - 1915 | 17 - 01 - 1992 |

### அமரர் P.M.இராசரத்தினம்

*(முன்னாள் யாழ்.மாவட்ட மேலதிக பதிவாளரும், காணிப் பதிவாளரும், ஸ்தாபகர் - தாவடி சத்தியசாயி சேவா நிலையம்)*

மரணம் கம்பீரமாகத், தனது இரையை எல்லா இடங்களிலும் எந்த நேரத்திலும் இரக்கமற்ற தீர்மானத்துடன் எடுத்துக்கொண்டிருக்கின்றது. அதன் பிடியிலிருந்து எவரும் தப்பமுடியாது. கடவுள் ஒருவரே உயிரைக் கொடுப்பவர், பாதுகாப்பவர். உயிரின் குறிக்கோளாக இருப்பவர்.

-பாபா-
*Sai Speaks, Vol. 6*

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

*மனைவி:*
திருமதி மகேஸ்வரி இராசரத்தினம்,
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

*பிள்ளையார் கோயிலடி, தாவடி, கொக்குவில்.* (97513)

## மணவாளக்கோல விழா

யாழ்ப்பாணம்,ஜன.25

யாழ்.கந்தர்மடம் அருள்மிகு செல்வநாகபூஷணி அம்பாள் ஆலயத்தின் மணவாளக்கோல விழாவும் திருவூஞ்சலும் இன்று காலை 10 மணிமுதல் ஆரம்பமாகிநடைபெறவுள்ளன.

காலை 10 மணிக்கு ஸ்நபன அபிஷேகம் இடம்பெற்றுத் தொடர்ந்து மாகேஸ்வரபூசை, திருவூஞ்சல், அம்பாள் வெளிவீதியுலாவருதல் என்பன இடம்பெறும். (க-7)

★ ★ ★

வடகோவை அருள்மிகு சாந்தி துர்க்கா ஆலயவருடாந்த மஹோற்சவதின மணவாளக்கோல சங்காபிஷேகம் இன்று காலை நடைபெறுகின்றது.

நாளையதினம் (சனிக்கிழமை) காலை நீர்வேலிக்கும் மாலை கோப்பாய்ப் பகுதிகளிலும் அம்பாள் கிராமவல தரிசனம் புரிவார்.(3-72)

## தவறவிட்ட அடையாள அட்டை

யாழ்ப்பாணம்,ஜன.25

யாழ்.போதனா வைத்தியசாலை வளவில் தவறவிடப்பட்ட விசேட அடையாள அட்டை ஒன்று கண்டெடுக்கப்பட்டு வைத்தியசாலை காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

சண்முகநாதன் பத்மகரணி (0908024657) என்பவரது அடையாள அட்டையே கண்டெடுக்கப்பட்டுள்ளது. உரியவர் அடையாளம் காட்டிப் பெற்றுக்கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (க-6)

## முள்ளிப் பகுதியில் 23 மலசல கூடங்கள் அமைக்க முடிவு

வலி.தென்மேற்கு,ஜன.25

ஆனைக்கோட்டை - முள்ளிப் பகுதியில் 23 மலசல கூடங்கள் அமைத்துக்கொடுக்க சண்டிலிப்பாய் பிரதேச செயலர் நா.வேதநாயகன் நடவடிக்கை எடுத்துள்ளார்.

முள்ளிப் பகுதியில் மலகூட வசதியின்மையால் பொதுமக்கள் வெளியிடங்களை நாடுகின்றனர். இதனால் நோய் பரவும் ஆபத்தை அடுத்தே உடனடியாக 23 மலசல கூடங்கள் அமைத்துக் கொடுக்கப் படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (க-185)

## வணிக பீட பரீட்சைகள்

யாழ்ப்பாணம்,ஜன.25

யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவக் கற்கைகள் வணிக பீட மாணவர்களுக்கான முதலாம் அரையாண்டுப் பரீட்சைக்கான விண்ணப்ப முடிவுதிகதி இன்றாகும்.

இந்தப் பரீட்சைகள் எதிர்வரும் 11 ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ளது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (3-6)

## சான்றிதழ் வழங்கும் வைபவம்

பருத்தித்துறை,ஜன.25

வடமராட்சிப்பிரிவு சுகாதாரத் தொண்டர்களுக்கு சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் பயிற்சி பெற்றமைக்கான சான்றிழ் வழங்கும் வைபவம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு சங்கத்தலைவர் செல்வி ப.உதயராணி தலைமையில் புலோலி மெ.மி.த.க. பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பருத்தித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி சி.கதிரவேற்பிள்ளை பிரதமவிருந்தினராகக் கலந்துகொள்வார். (3-118)

## திருவாசக முற்றோதல்

சுன்னாகம் ஐயனார் தேவஸ்தானத்தில் திருவாசகம் முற்றோதல் நாளை சனிக்கிழமை காலை முதல் இடம்பெறவுள்ளது.

ஓதுவார் மூர்த்தி சண்முகராசா, சிவத்திரு. சிவசண்முகவடிவேல ஆகியோர் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெறும். (-3)

**ஆரம்பம்: 27.01.2002**

**தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை**

ஒவ்வொரு ஞாயிறும் Bond பேப்பர் நடைபெறும்.

நேரம் : 10.00 a.m.

இடம்: **கொம்ரெக் கல்வி நிலையம்**
சித்தன்கேணி
(97511) (... இந்து அருகில்)

## கலாலயா பயிற்சியகம்

**மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்**
(பெருமாள் கோவிலுக்கு அண்மையில்)

- கேக் ஐஸிங்
- தையல் பயிற்சி
- உணவு தயாரித்தல்
- பூ வேலை
- கை வேலை
- FABRIC PAINTING

※ மேற்படி பயிற்சிகள் எல்லாவற்றையும் பயில்வோருக்கு இலவசமாக கூந்தல் அலங்காரம், FACIAL MAKEUP, மணப்பெண் அலங்காரம், கோலம் வகுப்புகள் நடைபெறும்.

※ சனி, ஞாயிறு புதிய பிரிவுகள் ஆரம்பம்:- 27.01.2002

கிழமை நாள் புதிய பிரிவுகள் ஆரம்பம்:- 28.01.2002

※ மேலும் விவரங்களுக்கு தினமும் பி.ப. 2.00 மணிவரை நேரில் தொடர்பு கொள்ளவும்.

(C-20453) - இயக்குநர்-

*வெளிவந்து விட்டது*

முதல்மொழி
தரம் 4 தமிழ் செயல்நூல்
*(புதிய பாடத்திட்டம் 2002 முதல்)*
விலை ரூபா 70/-

வெளியீடு:
**சுப்பிரமணிய புத்தகசாலை**
**காங்கேசன்துறைச்சாலை, யாழ்ப்பாணம்.**
(97504)

**சாவகச்சேரி**
## பனை, தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்
டச்சு வீதி, சாவகச்சேரி
### வருடாந்தப் பொதுக்கூட்டம்

மேற்படி சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 14-02-2002 ஆம் திகதி வியாழக்கிழமை நடைபெறவுள்ளது. இக்கூட்டத்திற்கு பிரேரணைகளைச் சமர்ப்பிக்க விரும்பும் பொதுச்சபைப் பிரதிநிதிகள் எழுத்துமூலமாக எதிர்வரும் 05-02-2002ஆம் திகதி செவ்வாய்க்கிழமைக்கு முன்பாக சங்கச் செயலாளருக்குப் பதிவுத்தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

இக்கூட்டத்துக்கான நிகழ்ச்சிநிரல் பின்னர் அறிவிக்கப்படும்.

குறிப்பு: இக்கூட்டத்தில் 1998, 1999ஆம் வருட என்பார்வை அறிக்கைகள் பரிசீலிக்கப்படவுள்ளதால் அறிக்கையைப் பார்வையிட விரும்புவோர் காரியாலயத்தில் தொடர்புகொண்டு பார்வையிடலாம்.

- செயலாளர்

தற்காலிக முகவரி:
*பிரதான வீதி, அச்சுவேலி.* (97506)

## ஐந்தாம் ஆண்டில் காலடி வைக்கும் ஞானச்சுடர் மலர் வெளியீட்டு விழாவும், கௌரவிப்பு நிகழ்வும்

| | |
|---|---|
| காலம் | : 27-01-2002 ஞாயிறு காலை 9 மணி. |
| இடம் | : சந்நிதியான் ஆச்சிரமம் |
| ஆசியுரை | : பேரவைப் போஷகர்கள் |
| மலர் மதிப்பீட்டுரை | : திரு.ஆ.சிவநாதன் (ஆசிரியர்) |
| அருளுரை | : நல்லை ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசார்ய சுவாமிகள் |
| கௌரவிப்பு நிகழ்வு | : கடந்த 5 வருடங்களாக வாராந்த வெள்ளி நிகழ்வு மற்றும் மலர் வெளியீடு தொடர்பாக பங்கு பற்றியவர்களுக்கான பாராட்டும் கௌரவிப்பும் இடம்பெறும். |
| நினைவுப் பிரார்த்தனை: | மாமனிதர் கலைஞானி அ.செல்வரத்தினம் அவர்களின் முதலாம் மாத நினைவுப் பிரார்த்தனையும் இடம்பெறும். |

*அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.*

சந்நிதியான் ஆச்சிரம
சைவ கலை,
பண்பாட்டுப் பேரவை.

*தொண்டைமானாறு.* (C/20457)

## நினைவலைகள்

இந்நாளில் யோக ஆசான்
**செல்லக்கிளி மாஸ்ரர்**
(ARL. விஜயரத்தினம்)
அவர்களை நினைவுகூருகின்றோம்.

*துணவானை:* (97509) *யோகசாந்தி நிலையம்.*

# திருமண வாழ்த்து

நாளை (26.01.2002) சனிக்கிழமை
இல்லறமாம் நல்லறத்தில் இனிதே இணையும் புதுமணத்தம்பதிகள்

மணமகன்
மோகனச்செல்வன்
(குமரன்)



மணமகள்
சசிரேகா
(சசி)

ஆகிய இருவரும்

**"அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை பண்பும் பயனும் அது"**

எனும் வான்புகழ் வள்ளுவர் வாக்குப்படி ஈச்சமோட்டை, ஞானவைரவர் துணையுடன் ஆல்போல் தழைத்து அறுகுபோல் வேரூன்றி பதினாறு பேறும் பெற்றுப் பல்லாண்டு காலம் வாழ்கவென நாம் மனதார வாழ்த்துகின்றோம்.

*வாழ்க மணமக்கள்!*

வாழ்த்துவோர்: *மணமகனின் நண்பர்களான*
பா.நந்தகுமார், பா.ஸ்ரீதர், சி.சிவாஸ்கரன்
(சண்டிலிப்பாய்)

*சுவாமியார் வீதி,*
*கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.* (C/20468)

# கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை திருமதி ச.இரங்கநாதன்
அவர்களின் பாசமிகு தந்தையார்

சட்டத்தரணி **அ.குலநாயகம்**

அவர்களின் மறைவையொட்டி எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

*பாடசாலைச் சமூகம்,* யா/சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலயம்
*பாடசாலை அபிவிருத்திச் சபை,* யா/பாலாவோடை இ.த.க.பாடசாலை
*பழைய மாணவர் சங்கம்.* (97524) களபூமி, காரைநகர்.

## லங்கா சிமெந்து லிமிட்டெட் தொழிற்சங்கம்
## (கைத்தொழில் பொதுத் தொழிலாளர் சங்கம்)
# வருடாந்தப் பொதுக்கூட்டம்

லங்கா சிமெந்து லிமிட்டெட் தொழிற்சங்கம் (கைத்தொழில் பொதுத் தொழிலாளர் சங்கம், லங்கா சிமெந்து நிறுவனக் கிளைச் சங்கம்) **27-01-2002 ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு மல்லாகம் மகா வித்தியாலயத்தில்** வருடாந்தப் பொதுக் கூட்டத்தை கூடவுள்ளது. இதில் தொழிலாளர்கள் 1990இலிருந்து இன்றுவரையான சம்பள நிலுவையைப் பெறுவது சம்பந்தமான விண்ணப்பத்தில் கையொப்பம் இட வேண்டியுள்ளதால் ஓய்வுபெற்றவர்கள், வேலையில் இருந்து விலகியவர்களாகக் கருதப்பட்டவர்கள், சுயவிருப்பில் ஓய்வு பெற்றவர்கள் உட்பட அனைத்து அங்கத்தவர்களும் இந்த அறிவித்தலை ஏற்று தவறாது சமுகம்தருமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**செ.தேவகுணாளன்,** தலைவர். (97530) **ஆ.முத்துவேல்,** செயலாளர்.

# அழைப்புக்கட்டளைத் திருத்தம்

**மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்**

**மணநீக்கம்/85**

இவ்வழக்கில் எதிராளிக்கு வழங்கப்பட்ட அறிவித்தல் 14.12.2002 என தவறாகக் குறிக்கப்பட்டது. அதனை 08.02.2002 எனக் கொள்ளவும்.

செ.விக்னேஸ்வரமூர்த்தி
பதிவாளர்,
(C/20454) மாவட்ட நீதிமன்று, மல்லாகம்.

## நூல் வெளியீட்டு விழா

யாழ்.பல்கலைக்கழக சமூகவியல் சமூகத்தின் ஏற்பாட்டில் கலாநிதி எஸ்.கே.எஸ்.நாதனின் 'அரசியற் சமூகவியல் - ஓர் அறிமுகம்' எனும் நூலின் வெளியீட்டுவிழா இன்று பிற்பகல் 2.30 மணிக்கு புவியியற்றுறை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

## கருத்தரங்கு

யாழ்.பல்கலைக்கழக புவியியற் கழகத்தின் ஏற்பாட்டில் இன்று காலை 10 மணிக்கு புவியியற்துறை மண்டபத்தில் நடைபெறும் கருத்தரங்கில் கொழும்பு பல்கலைக்கழக திட்ட இணைப்பாளர் கலாநிதி மாக்ஸ் மேயர் "வறுமை மற்றும் பிரச்சினைகள் பற்றி ஆய்வுத்திட்டம்" என்னும் தலைப்பில் கருத்துரை வழங்குவார். (ஒ-8)


**வணிகக்கல்வி**
**மாலை நேர வகுப்புகள்**
**A/L - 2003**
**தொடர்பாடல்**
**By: திரு.S.யசோ**
*ஆரம்பம்:* – 26.01.2002 sat–4p.m.
**BEACON**
(யாழ்நகர்)
(97526)


## தவறிவிட்டது

ஆஸ்பத்திரி வீதி, புனித யுவானியார் ஆலயத்துக்கும், திருச்சிலுவை வைத்திய சாலைக்கும் (HOLY CROSS HOSPITAL) இடையில் கைக்கடிகாரம் ஒன்று (23.01.2002) புதன்கிழமை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் **சீ.தர்மபாலன் 859/6, ஆஸ்பத்திரி வீதியில்** ஒப்படைத்து உதவவும். சன்மானம் வழங்கப்படும். (97525)


**நாகம்ஸ்** சுன்னாகம்
இன்று முதல் குதூகல ஆரம்பம்
விஜயகாந்த், இஷா,
ரம்யா கிருஷ்ணன், வடிவேல்
நடித்த
**நரசிம்மா**
(ரீல்ஸ்)
காட்சிகள்: 11.00, 3.00 (பு.நே.)
(97521)

**லஷ்சுமி** இணுவில்
மம்முட்டி, முரளி, ரம்பா,
தேவயானி, அப்பாஸ் நடித்த
**ஆனந்தம்** (ரீல்ஸ்)
தினசரி: 10.30, 2.30 (ப.நே.)
(97534)

**ராஜா** யாழ்ப்பாணம்
இன்று முதல் குதூகல ஆரம்பம்
கமல்ஹாசன், சிம்ரன்,
சிநேகா, அப்பாஸ் நடித்த
**பம்மல் K சம்பந்தம்**
தினசரி: 10.30, 2.30 (புதிய நேரம்)
சனி, ஞாயிறு 10.30, 2, 5 (பு.நே.)
(C/20092)

**நிறைஞ்சனாஸ்**
சங்கானை
விஜய், தேவயானி, ரம்பா
மற்றும் பலர் நடித்த
**நினைத்தேன் வந்தாய்**
(ரீல்ஸ்)
தினசரி: 11.00, 2.30, 5.30 (பு.நே.)
(C-20448)


# மரண அறிவித்தல்கள்

## கார்த்திகேசு தம்பிராசா

சுன்னாகம் தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கார்த்திகேசு தம்பிராசா நேற்றுமுன்தினம் (23.01.2002) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அன்னமுத்துவின் அன்புக் கணவரும் மனோன்மணி, சுந்தரலிங்கம் (பிரான்ஸ்), ஆனந்தலிங்கம் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆனந்தகுமாரதாஸ் (ஓய்வுபெற்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர், தொழில்நுட்ப உத்தியோகத்தர் - விரி.கொன்ஸ்றக்சன்), சத்தியாதேவி அம்மையார் (பிரான்ஸ்), சாந்தரூபி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஜெயாணி (கொழும்பு), ஜெயரூபன் (உயர்தர மாணவன், கொக்குவில் இந்துக் கல்லூரி), சித்பவி (மாணவி, கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை), சதீசன் (பிரான்ஸ்), பொற்செல்வி (பிரான்ஸ்), அஜந்தன் (பிரான்ஸ்), அனுசா (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*இலங்கை வங்கி ஒழுங்கை,* ஆ.மனோன்மணி (மகள்),
*சுன்னாகம் தெற்கு.* செ.ஆனந்தகுமாரதாஸ்
(97528) (மருமகன்).

## வைத்திலிங்கம் தளையசிங்கம்

வட்டுக்கோட்டை கிழக்கைப் பிறப்பிடமாகவும் தற்போது வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் தளையசிங்கம் நேற்றுமுன்தினம் (23.01.2002) புதன்கிழமை வெள்ளவத்தையில் காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (24.01.2002) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் (30/8, Hampden Lane) நடைபெற்று, பூதவுடல் கனத்தை மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*"செல்வா வாசம்",* பொன்ராசா இரத்தினதேவி
*வட்டுக்கோட்டை.* (97516) (மருமகள்).

## திருமதி வைத்திலிங்கம் அன்னம்மா

உரும்பிராய் தெற்கு, விளானையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் அன்னம்மா நேற்று (24.01.2002) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வைத்திலிங்கத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற செல்லர் - சின்னம்மாவின் அன்பு மகளும் காலஞ்சென்ற இளையதம்பி - தங்கமுத்துவின் மருமகளும் காலஞ்சென்ற இராசம்மா, குருசாமி ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்ற சுப்பிரமணியத்தின் மைத்துனியும் தங்கராணி (கனடா), சற்குணநாதன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும் இராசரத்தினம் (கனடா), கமலாம்பிகை (கனடா) ஆகியோரின் மாமியாரும் செந்தூரன் (கனடா), ஆரூரன் (கனடா), கோகுலன் (கனடா), ரமணன் (கனடா) ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.01.2002) வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் வேம்பன் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*பெற்றோல் செற் முன்ஒழுங்கை,* தங்கராணி (மகள்)
*விளானை,* சிவசுப்பிரமணியம்
*உரும்பிராய் தெற்கு.* (97515) (பெறாமகன்) (மாமா)

## ஸ்ரீமதி ஜெகந்நாதசர்மா இந்திராக்ஷி அம்மாள்

நல்லூர் சிவன்கோயிலடி பிரம்மஸ்ரீ ஜெகந்நாதசர்மா அவர்களின் தர்மபத்தினி இந்திராக்ஷி அம்மாள் நேற்று (24.01.2002) வியாழக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் நல்லூர் சிவன்கோயில் ஆதீனகர்த்தா அமரர் கார்த்திகேசக் குருக்களின் மகளும் அமரர் பேராசிரியர் கைலாஸநாதக் குருக்கள், அமரர் சர்வலோகநாயகி அம்மாள், இரத்தின கைலாஸநாதக் குருக்கள் (முன்னேஸ்வரம்), பாலாபரமேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற நாகேஸ்வரசர்மா (மகேசன்), நாகேஸ்வரராணி, சண்முகானந்தசர்மா (கொழும்பு) ஆகியோரின் அன்புத் தாயாரும், இரவீந்திரசர்மா (பிரதேச செயலகம், நல்லூர் - A.D.P.), பத்மாவதி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஜனார்த்தனன், கிரதரன், சௌம்யா, மீனாம்பிகை, லலிதாம்பிகை, பத்மப்பிரியா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (24.01.2002) வியாழக்கிழமை மாலை நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பிரம்மஸ்ரீ S.ஜெகந்நாதசர்மா
(கணவர்)
*நல்லூர்.*
பிரம்மஸ்ரீ S.இரவீந்திரசர்மா
(C/20460) (மருமகன்)

## நாகலிங்கம் சோமசுந்தரம் (ஸ்தபதி)

இந்தியாவைப் பிறப்பிடமாகவும் கோண்டாவில் மேற்கை வசிப்பிடமாகவும் தற்போது கொழும்பில் வசித்தவருமாகிய நாகலிங்கம் சோமசுந்தரம் (ஸ்தபதி) நேற்று (24.01.2002) வியாழக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற அன்னபூரணத்தின் அன்புக் கணவரும் இரத்தினம்மா, தங்கவேலு (ஸ்தபதி) ஆகியோரின் அன்புச் சகோதரரும் கெங்காதரனின் பாசமிகு தந்தையும் உதயகுமாரி, உதயகுமார், கைலாசநாதன், யசோதாதேவி, உமையாள், ஞானகணேசன், சாந்தினி ஆகியோரின் பெரியப்பாவும் சொர்ணாம்பிகை இராமமூர்த்தி, சந்திரசேகரன் ஆகியோரின் அன்பு மாமனாரும் பாலசுந்தரத்தின் பேரனும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (25.01.2002) வெள்ளிக்கிழமை மாலை 4.00 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொழும்பு மாதம்பிட்டி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*அளுத்மாவத்தை,* கணேசு (கோண்டாவில்),
*கொழும்பு* (97529) கிருபா (வண்ணார்பண்ணை).

# நல்லூர் வணிகர் கழகம்
## 2002ஆம் ஆண்டுக்கான நிர்வாகசபை உறுப்பினர்கள்

நல்லூர் வணிகர் கழகத்தின் 2002ஆம் ஆண்டுக்கான பொதுக்கூட்டம் 20.01.2002இல் நல்லூர் வணிகர் கழகப் பணிமனையில் பி.ப. 2.00 மணிக்கு நடைபெற்றபோது பின்வருவோர் நிர்வாகசபை உறுப்பினர்களாகத் தெரிவாகியுள்ளார்களென்பதை சகல வர்த்தகர்களுக்கும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

1. *தலைவர்* திரு.க.கிருஸ்ணானந்தமூர்த்தி
2. *செயலாளர்* திரு.ம.குணபாலன்
3. *பொருளாளர்* திரு.செ.திருப்பதி
4. *உபதலைவர்* திரு.மு.சிவசுப்பிரமணியம்
5. *உபசெயலாளர்* திரு.பெ.செல்லையா
6. *கணக்காய்வாளர்* திரு.க துவாரகன்

**ஏனைய உறுப்பினர்கள்**

7. திரு.செ.தர்மரத்தினம்
8. திரு.ஆ.சுந்தரலிங்கம்
9. திரு.பா.பாலச்சந்திரன்
10. திரு.நா.எழில்மோகன்
11. திரு.செ.ஏரம்பநாதன்
12. திரு.இ.இரத்தினசிங்கம்
13. திரு.க.புஸ்பராசா
14. திரு.இ.யோகராசா
15. திரு.க.தவரூபன்
16. திரு.வே.சத்தியசீலன்
17. திரு.க.இராசேந்திரம்

ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி கிழக்கு, திருநெல்வேலி. (97520)

செயலாளர்,
நல்லூர் வணிகர் கழகம்.

# மகரகமவில் சிகிச்சை பெற்று திரும்பியவர் கப்பலில் உயிரிழப்பு

புற்றுநோயால் பீடிக்கப்பட்ட ஒருவர் மேலதிக சிகிச்சைகளுக்காக கொழும்பு மகரகம புற்றுநோய் வைத்தியசாலைக்கு சென்று சிகிச்சை பெற்றுக்கொண்டு வீடு திரும்பும்போது நடுக்கடலில் கப்பலில் உயிரிழந்தார்.

நேற்றுக் காங்கேசன்துறை துறைமுகத்திற்கு வந்து சேர்ந்த செஞ்சிலுவைச் சர்வதேசக்குழுக் கப்பலில் குடாநாட்டுக்கு வந்துகொண்டிருந்த திருநெல்வேலி கலாசாலை வீதியைச சேர்ந்த பாவிலு அருளப்பு (வயது64) என்ற வயோதிபரே நடுக்கடலில் உயிரிழந்ததாகக் கூறப்படுகிறது.

இவர் கடந்த நவம்பர் மாதம் 15ஆம் திகதி மேலதிக சிகிச்சைகளுக்காக மகரகம புற்றுநோய் வைத்தியசாலைக்கு யாழ்.போதனா வைத்தியசாலையில் இருந்து நோயாளர் கப்பல் சேவை மூலம் திருகோணமலைக்கு அனுப்பப்பட்டிருந்தார்.

இவரது சடலம் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவினரால் யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டு பிரேதபரிசோதனை மற்றும் மரணவிசாரணையின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

(ஒ-6-ரி-15-139)

## நேற்று கொழும்பில் இரு ஆர்ப்பாட்டங்கள்

கொழும்பில் நேற்று இரு ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன. தேர்தலுக்குப் பின்னர் நடைபெற்ற வன்முறைச சம்பவங்களுக்கு ஆட்சேபம் தெரிவித்து பொதுமக்கள் ஐக்கிய முன்னணி நடத்திய ஆர்ப்பாட்டம் விட்டன் சதுக்கத்தில் நடைபெற்றது.

கொழும்பு பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் உட்பட ஒன்பது மாணவர்கள் இடை நிறுத்தப்பட்டிருப்பதை ஆட்சேபித்து நடத்தப்பட்ட வகுப்புப் பகிஷ்கரிப்புப் போராட்டமும் நேற்று இடம்பெற்றது. (ஒ)

# நாரந்தனையில் கோஷ்டி மோதல்!

யாழ்ப்பாணம்,ஜன.25

நாரந்தனையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கோஷ்டி மோதலில் ஒருவர் காயம் அடைந்தார்.

ஜேசுராசா ஜெயராசா என்பவரே காயம் அடைந்த நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணை மேற்கொண்ட ஊர்காவற்றுறைப் பொலீஸார் சந்தேகத்தின் பேரில் இருவரைக் கைதுசெய்தனர்.

இருவரும் யாழ்.நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட சமயம் இருவரையும் விளக்கமறியலில் வைக்கும்படி மேலதிக நீதிவான் திருமதி எஸ்.இளங்கோவன் உத்தரவிட்டார்.

# வடக்கு – கிழக்கு தமிழர்தாயகம் என்பதனை அரசு ஏற்கவில்லை

## இப்படிக் கூறுகிறார் ரணில்

கொழும்பு,ஜன.25

'வடக்கு - கிழக்கு மாகாணம் தமிழர்களின் தாயகம்' என்ற கொள்கையை ஐக்கிய தேசிய முன்னணி ஏற்றுக்கொள்ளவில்லை என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அமர்புர சங்கசபாவின் மகாநாயக்கர் சங்கைக்குரிய மடிகே பஞ்ஞாசிக தேரரை நேற்றுச் சந்தித்த போது அவரிடம் பிரதமர் இவ்வாறு கூறியதாக இலங்கை வானொலி தெரிவித்தது.

விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்குவது தொடர்பாக அரசு எவருடனும் எந்தவித உடன்பாட்டுக்கும் வரவில்லை என்றும் -

ஆயினும் விடுதலைப் புலிகள் மீதான தடையுடன் சம்பந்தப்பட்ட சட்டங்களை திருத்துவது குறித்து தமது அரசு ஆலோசனைகளை மேற்கொண்டிருப்பதாகவும் -

தேரரிடம் பிரதமர் மேலும் தெரிவித்துள்ளார். (ஒ-8)

## உற்பத்தி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தித் திட்டத்துக்கு அமைய மடு வீதியின் புனரமைப்புப் பணிகள் சில தினங்களில் முடிவடையுமென்றும-

ஓமந்தைப் பகுதியில் பொருள்களை ஏற்றி இறக்கும் தள நிலையம் ஒன்று அமைக்கப்பட்டு வருவதாகவும் -

வவுனியா அரச அதிபர் தெரிவித்துள்ளார். (ஒ-10)

## இருதரப்பு போர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்ற சர்வதேச அழுத்தத்துக்கு அரசு ஆளாகியிருக்கிறது. அப்படியிருக்கையில் புலிகள் மீதான தடைதான் சமாதானப் பேச்சுக்குத் தடை என்றால், சர்வதேச ஆதரவைப் புறக்கணிக்காது தடைநீக்கம் தொடர்பான இறுதி முடிவெடுக்க அரசு தயாராக இருக்கிறது.

வெளிநாடுகளில் புலிகள் மீதான தடைக்கும், எமது நாட்டில் புலிகள் மீதான தடைக்கும் தொடர்பில்லை. வெளிநாடுகளின் தடை குறித்த முடிவு இலங்கையைச் சார்ந்தது அல்ல. அவ்வாறே தடைபற்றிய எமது முடிவு வெளிநாடுகளைச் சார்ந்தது அல்ல.

இலங்கையில் புலிகள் மீதான தடையை நீக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டால் கூட அதில் பல சட்ட நுணுக்கங்கள் உள்ளன.

பூரண தடைநீக்கமா? பேச்சுக்காக மட்டும் தடைநீக்கமா? சில நிபந்தனைகளுடன் தடையைத் தளர்த்துவதா? என்பது போன்ற பல விடயங்கள் உள்ளன.

இவை பற்றிய இறுதி முடிவு குறித்து காலவரையறை எதுவும் இப்போது கூறமுடியாது.

இவ்வாறு அமைச்சர் பீரிஸ் தெரிவித்தார்.

(ஐ-3-8-10)

324,பலாலி வீதி, யாழ்ப்பாணம்
இணையமொழி ஜாவா
Java
புதிய பிரிவு ஆரம்பம்
26.01.2002 3.00pm
JAVA
MCS

சிவமயம்

**திருமண அழைப்பு**

அன்புடையீர்,

நிகழும் மங்களகரமான விஷு வருடம் தைத்திங்கள் 14ஆம் நாள் (27.01.2002) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.20 முதல் 12.22 மணி வரையுள்ள புனர்பூச நட்சத்திரமும் சித்தயோகமும் சுபகரண மேடலக்கினமும் கூடிய சுபமுகூர்த்த வேளையில் நல்லைக்கந்தனின் அருட்கடாட்சத்தால்,

குமாரசாமி தம்பதிகளின் புத்திரன்
திருநிறைசெல்வன்
சிவனேஸ்வரநாதன்
அவர்களுக்கும்



பத்மநாதன் தம்பதிகளின் புத்திரி
திருநிறைசெல்வி
கலாம்பரி
அவர்களுக்கும்

திருமாங்கல்யதாரணம் புதிய நல்லை ஆதீன கலாமண்டபத்தில் நடைபெற திருவருள் கிட்டி பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் திருமணத்திற்கு வருகை புரிந்து மணமக்களை ஆசீர்வதித்து, தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் பங்குபற்றிச் சிறப்பிக்கும் வண்ணம் எமது அன்புக்குரிய அனைவரையும் உள்ளம் உவகையுற்று அன்புடன் அழைக்கின்றோம்,

(இதனையே தங்களுக்குரிய தனிப்பட்ட அழைப்பாக தயவுகூர்ந்து ஏற்றுக்கொள்ளவும்.)

தங்களின் இனிய வரவால் இன்புறும்:
கலாசூரி N.K.பத்மநாதன் குடும்பத்தினர்
(நாதஸ்வர வித்துவான்)

*199/4, கில்னர் லேன்,*
*யாழ்ப்பாணம்.*

(C/2046?)

**JT JAFFNA TRADERS**

**பேக்கறி உரிமையாளர்களுக்கு!**

தங்கள் உற்பத்திகளுக்குத் தேவையான லீவபிறதர்ஸ் ரேக்கி பிறாண்ட் தயாரிப்புகளான




- கைக்கோ
- மாஜா
- ஈஸ்ற்
- மாஜறீன் வகைகளை




*உடன் நியாயமான விலையில் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஸ்தாபனம்*

**யாழ்ப்பாண வணிக நிலையம்**

302, ஆஸ்பத்திரி வீதி, (97523) T.P. 2509, 2806 யாழ்ப்பாணம்.

**ஸைசன் உடுவில்**
பொருளியல்
A/L 2004
P.மோகன்
சனி → 9.30 a.m.
தனிப்பாட அனுமதி உண்டு
(97485)

**BRIGHTMAN**
பிறவுண் வீதி, நீராவியடி, யாழ்நகர்.
புதிய பிரிவு சரளமாக உரையாட
சிங்களம்
By:- லீலாக்கிருஸ்ணன்
ஆரம்பம்:-
நாளை (26.01.2002) Sat.2.30 p.m.
(97491)

**பரீட்சை**
தரம்: (3) முதல் (O/L) வரை
1st MID TERM EXAMINATION - 2002
26-01-2002 (சனி)
மாலை ஆரம்பமாகும்
வெளிமாணவரும் எழுதலாம்
விண்ணப்பத்திரம் தேவையானால் முன்னரே பதிவுசெய்யவும்.
**சயன்ஸ் அக்கடமி**
நல்லூர்.
"எம்முடன் இணைந்தோர் உயர்கல்வி பெற்றோரே"
(97532)

**NEW SCIENCE COLLEGE**
PHYSICS
2004 பொறியியல்
ஆரம்பம்: 29.01.2002
செவ், வியா: 4 - 5
2003
மின்புலம்
ஆரம்பம்: 29.01.2002
செவ், வியா: 5 - 6
By:R.குகன் (B.Sc.)
(97531)

**முக்கிய அறிவித்தல்**

இல.455 ஸ்ரான்லி வீதியில் பேன்ஸி பொருள்கள் விற்பனையில் முன்னணியில் திகழ்ந்து தவிர்க்க முடியாத காரணத்தால் சில காலம் இடைநிறுத்தப்பட்ட

**சிமிலிகுமார்**

எனும் நிறுவனம் மீண்டும் 01.02.2002இல் ஆரம்பமாகும் என்பதை வாடிக்கையாளர் கவனத்திற்கு அறியத்தருகின்றோம்.

455, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். - *சிமிலிகுமார் அ.குமார்*
(97487)

**தொலைத்தொடர்பு நிலைய (மோட்டோறோலா) உரிமையாளர் சங்கம்**
*Telephone (Motorola) Owner's Union*

**வருடாந்தப் பொதுக்கூட்டம்**

காலம்: 27-01-2002 ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.00 மணி
இடம்: கொக்குவில் இந்துக் கல்லூரி மண்டபம்

நிகழ்ச்சிநிரல்

1. தலைமையுரை
2. செயலாளர் அறிக்கை
3. பொருளாளர் அறிக்கை
4. பிரேரணைகள்
5. சபையோர் குறிப்புரை
6. நடப்பாண்டுக்கான உத்தியோகத்தர் தெரிவு
7. வேறு விடயங்கள்
8. நன்றியுரை

அனைத்து அங்கத்தவர்களையும் தவறாது சமுகமளிக்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

த.தேவராசா, தலைவர், "ஸ்ரீ சாலினி", காங்கேசன்துறை வீதி, இணுவில். (97490)

ஐ.நற்குணநாதன், செயலாளர், "திருப்பதி", மானிப்பாய் வீதி, உடுவில்.

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 25.01.2002இல் வெளியிடப்பெற்றது.